பொழிவு - 19
குவிப்பு - 01
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
ஜனவரி - 2016
(ISSN 1800-2641)
Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 68 / News / 2015"

### ஐ.எஸ். தீவிரவாதிகளால் அச்சுறுத்தல் உள்ள நிலையில் நத்தார் தின உரையின்போது

## குண்டு துளைக்காத பாதுகாப்பு மேலாடையை அணிந்துகொள்ள மறுத்த திருத்தந்தை!





திருத்தந்தை பிரான்சிஸ் ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஒரு தாக்குதல் இலக்காகவுள்ளதாகப் பொலிஸார் எச்சரித்துள்ள நிலையிலும் அவர் தனது நத்தார் தின உரையின்போது துப்பாக்கி ரவை துளைக்காத மேலாடையை அணிவதற்கு மறுத்துள்ளார். பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் அண்மையில் இடம்பெற்ற 130 பேர் பலியாவதற்குக் காரணமாக அமைந்த தாக்குதல்களையொத்த தாக்குதல்களை இத்தாலி உரோம் நகரில் தாம் நடத்தவுள்ளதாக ஐ. எஸ். தீவிரவாதிகள் காணொளிக் காட்சிகளில் அச்சுறுத்தல் விடுத்திருந்தனர்.

இது தொடர்பில் திருத்தந்தையின் பேச்சாளர் தெரிவிக்கையில் திருத்தந்தை அந்த அச்சுறுத்தல் தொடர்பில் அறிந்துள்ளார் எனவும் ஆனால் அவர் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு அஞ்சவில்லை எனவும் கூறினார். இந்த வருடத்துக்கான நத்தார் தின உரையின்போது தான் பயணிக்கும் வாகனத்தில் குண்டு துளைக்காமல் இருப்பதற்கான மேலதிக பாதுகாப்பை மேற்கொள்வதற்கும் திருத்தந்தை மறுப்புத் தெரிவித்திருந்ததாக அவர் கூறினார். ஐ. எஸ். தீவிரவாதிகளின் உரோம்மீதான தாக்குதல் திட்டத்தில் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் என்ற வகையில் திருத்தந்தை பிரதான தாக்குதல் இலக்காக விளங்குவதாகக் கருதப்படுகிறது. அதனால் திருத்தந்தையின் நத்தார் தின உரையின்போது அவருக்கு பாதுகாப்பை வழங்கும் நடவடிக்கையில் பெருமளவு பொலிஸாரும் படையினரும் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாக வத்திக்கான் அறிவித்திருந்தது. (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## மன்னார் மறைமாவட்டத்தில் கிறிஸ்தவ ஒன்றிப்பு வார நிகழ்வுகள்

### ஜனவரி 17 – 25



ஒவ்வொரு ஆண்டும் நினைவுகூரப்படும் கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தை (ஜனவரி 18 - 25) இவ்வாண்டு மன்னார் மறைமாவட்டத்தில் முருங்கன் மற்றும் வவுனியா ஆகிய இரண்டு இடங்களில் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முருங்கனில் ஜனவரி 24ஆம் திகதி மாலை 4.00 மணிக்கும், வவுனியாவில் ஜனவரி 25ஆம் திகதி மாலை 4.00 மணிக்கும் கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதில் கத்தோலிக்க திருச்சபையும், பிரதான திருச்சபைகள் (Main Line Churches) என்று அழைக்கப்படுகின்ற அங்கிலிக்கின் திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை போன்ற திருச்சபைகளும் இணைந்து பங்கெடுக்கவுள்ளன.

முருங்கனைத் தளமாகக் கொண்டு அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட "மன்னார் கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒன்றியம்" (Union of Christian Churches of Mannar) என்ற அமைப்பினால் முருங்கனிலும், வவுனியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் "வவுனியா கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒன்றியம்" (Union of Christian Churches of Vavuniya) என்ற அமைப்பினால் வவுனியாவிலும் இந்த இறைவேண்டல் நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)




ஜனவரி 15ஆம் திகதி தைப்பொங்கல் தினமாகும். மன்னா வாசகர்கள் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். உங்கள் இல்லங்களும் உள்ளங்களும் இறை இரக்கத்தினால் பொங்கி வழியட்டும்!

## ஜனவரி 31இல் திருப்பாலத்துவ சபை ஞாயிறு

Holy Childhood
Inspiring Lifelong Success




பிள்ளைகள் தமது விசுவாசத்தை, தமது பரிசுகளை, தமது வாழ்வை, தமது அன்பை ஏனைய பிள்ளைகளுடன் பகிர்ந்துகொள்ள நாம் அவர்களை வழிநடத்தவேண்டும். இவ்வாறு பிள்ளைகளில் மறைபரப்பு ஆர்வத்தைத் தூண்டவேண்டிய நாளாக இந்த நாள் அமைகின்றது. பங்கில் உள்ள திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்களும், திருப்பாலத்துவசபைப் பிள்ளைகளும் இந்த நாளில் தமது மறைபரப்பு அர்ப்பணத்தைப் புதிப்பிக்கும்படி அவர்களை வழிநடத்துவோம்.

மன்னார் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனர் அருட்பணியாளர் ஏ. யூட் குரூஸ் அடிகளார் திருப்பாலத்துவ சபை பிள்ளைகளுக்கும், ஊக்குவிப்பாளர்களுக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்.

திருப்பாலத்துவ சபை ஞாயிறு மையப்பொருள் :
"இறைவனுடைய இரக்கத்தின் பிள்ளைகளாகி
நாம் இரக்கத்தைப் பகிர்ந்திடுவோம்"
*"Let us be the children of God's mercy,*
*to become merciful to others"*

## மேரி பஸ்ரியன் அடிகளாரின் நினைவு நிகழ்வு



அமரர் அருட்பணியாளர் மேரி பஸ்ரியன் அடிகளார் படுகொலை செய்யப்பட்டு இறந்த 31ஆம் ஆண்டு நினைவு கடந்த ஜனவரி மாதம் 6ஆம் திகதி வங்காலையில் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டது. அன்றைய தினம் காலை 6.00 மணிக்கு வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி இடம்பெற்றது. அதைத்தொடர்ந்து அடிகளாரின் உருவச்சிலைக்கு முன்பாக அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வை அர்த்தமுள்ளதாக்கும் வகையில் சென்ற வருடத்தைப்போன்று இந்த வருடமும் ஆலய வளாகத்தில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் 77 பேர் இரத்ததானம் செய்தனர்.

இந்நிகழ்வுகள் அனைத்தையும் வங்காலைப் பங்குத்தந்தை அருட்திரு. எஸ். ஜெயபாலன் அடிகளார் மற்றும் உதவிப் பங்குத்தந்தை அருட்திரு. நிக்கலஸ் ஆகியோர் ஒழுங்கமைத்திருந்தனர்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்!

**உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப் பெற ஏன் நீங்கள் வழிசெய்யக்கூடாது?**



ஒரு வருடத்திற்கான
உள்நாட்டுச் சந்தா ரூபா 800.00
வெளிநாட்டுச் சந்தா ரூபா 3,500.00

எம்மோடு தொடர்புகொள்ளுங்கள் -
077 - 7420811, 023 - 2250789, 023 - 3233276

## மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 35 ஆண்டுகள் நிறைவு விழா


### யாழ் ஆயரின் தலைமையில் திருப்பலி இடம்பெறும்

மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 35 ஆண்டுகள் (1981) நிறைவு விழா எதிர்வரும் ஜனவரி மாதம் 30ஆம் திகதி காலை 7.30 மணிக்கு தோட்டவெளி வேதசாட்சிகள் அன்னை ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது. யாழ் மறைமாவட்டத்தின் புதிய ஆயர் மேதகு ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் இச்சிறப்புத்திருப்பலிக்கு தலைமை தாங்குவார்.

மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை அடிகளார் மற்றும் தோட்டவெளிப் பங்குத்தந்தை அருட்பணி றொக்சன் குரூஸ் அடிகளார் ஆகியோரின் நெறிப்படுத்தலில் இந்த விழாவுக்கான ஆயத்தங்கள் இடம்பெறுகின்றன.

மன்னார் மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளைச் சார்ந்த இறைமக்களும் இந்த மறைமாவட்ட விழாவில் கலந்துகொள்ளவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர். போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## கோமரசன்குளம் கல்வாரித் திருத்தலம்





வவுனியா, பெரியகோமரசன்குளம் கல்வாரி யாத்திரைத் தலத்தின் 2016ஆம் ஆண்டிற்கான தவக்கால தியான வழிபாட்டு ஒழுங்குமுறைகள் பற்றிய விபரங்களை 4ஆம் பக்கத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## கிறிஸ்தவ ஒன்றிப்பு

திருச்சபையின் இன்றியமையாத ஓர் இயல்புக்கூறு அதன் ஒற்றுமை ஆகும். கடவுள் ஒருவரே! அவர் மகன் இயேசுக் கிறிஸ்துவும் ஒருவரே! திருச்சபை ஒன்றே! அதன் நம்பிக்கையும் ஒன்றே! ஆனால் இன்று கிறிஸ்தவம் பிளவுபட்டு நிற்கின்றது. அதிலுள்ள பல்வேறு சபைகள், கோட்பாடுகள், வழிபாட்டு முறைகள், ஆட்சி அமைப்புகள், செயற்பாடுகள் என்பவற்றில் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டு நிற்பன மட்டுமன்று; பலவேளைகளில் அவை ஒன்றிற்கு ஒன்று முரணாகவும் எதிராகவும்கூடச் செயற்படுகின்றன.

கிறிஸ்தவத்தில் நிலவும் இந்தப் பிளவுகள் இயேசுக்கிறிஸ்துவின் விருப்பத்திற்கு முற்றிலும் முரணானவை. "எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக!" (யோவா. 17-2) என்பது இயேசுவின் மன்றாட்டு.

### பிளவுகளும் ஒன்றிப்பு முயற்சிகளும்

கிறிஸ்தவ சமூகத்தின் பிளவுகள் இன்றோ நேற்றோ திடீரென ஏற்பட்டவை அல்ல. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இருந்தே பிளவுகள் தோன்றியுள்ளன. (காண். 1கொரி 1:10 தொ). காலப்போக்கில் ஆரியுசு, நெஸ்தோரியுசு போன்றோர் சிலருடைய திரிபுக்கொள்கைகள் காரணமாகவும் பிளவுகள் ஏற்பட்டன. 11ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவத்தில் ஏற்பட்ட கிரேக்க சபை, உரோமை சபை என்னும் பிளவு மிகப்பெரியது மட்டுமன்று; நிரந்தரமாக இன்றுவரை நிலைப்பதும்கூட. அதுபோல் 16ஆம் நூற்றாண்டில் சமயச்சீர்திருத்தம் காரணமாக ஐரோப்பாவில் நிகழ்ந்த சீர்திருத்த சபைகளின் பிரிவும், இங்கிலாந்தில் அங்கிலக்கச் சபையின் பிரிவும் இன்றுவரை தொடருபவை. இன்னும் பல நூறு சபைகள் தோன்றிப் பிளவுபட்டு நிற்பதே இன்றைய கிறிஸ்தவத்தின் நிலை.

### ஒன்றிப்பிற்கான இயக்கங்கள்

கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கம் 1910ஆம் ஆண்டு ஆங்கிலக்க, சிர்திருத்த சபைகள் இணைந்து எடின்பர்க் நகரில் நடத்திய அனைத்துலக நற்செய்தி அறிவிப்பு மாநாட்டிலிருந்து பிறப்பெடுத்தது எனலாம். எனினும் அதற்கு முன்பே கிறிஸ்தவ ஒன்றிப்பிற்காக இறைவேண்டல் செய்யும் வழக்கம் பல்வேறு சபைகளில் ஆங்காங்கே அரும்பியிருந்தது. இவற்றுள் குறிப்பிடத்தக்கது 1908ஆம் ஆண்டு ஆங்கிலக்கச் சபைப் பணியாளர் பவுல் வாட்சன் துவக்கிய "கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம்" (ஜனவரி 18 - 25) என்பது. கிறிஸ்தவ ஒன்றிப்பிற்காகக் கிறிஸ்தவர்கள் எட்டு நாள்கள் சிறப்பாகக் கடவுளை வேண்டும் இவ்வழக்கம் 1916ஆம் ஆண்டு அன்றைய திருத்தந்தை 15ஆம் பெனடிற்றுவால் ஏற்கப்பட்டு கத்தோலிக்க திருச்சபை முழுவதற்கும் உலகெங்கும் விரிவாக்கப்பட்டது.

கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கத்தின் அடுத்த சிறப்பான வளர்ச்சி இந்த நூற்றாண்டின் இடைப்பகுதியில் நிகழ்ந்தது. இதில் குறிப்பிடத்தக்கவை பின்வரும் முப்பெரும் நிகழ்ச்சிகள்: 1947ஆம் ஆண்டு தென்னிந்தியாவில் உள்ள ஆங்கிலக்கச் சபையும், பல சீர்திருத்தச் சபைகளும் சேர்ந்துவந்து தென்னிந்தியத் திருச்சபையாக ஒன்றிணைந்தது உலகெங்கும் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கு ஒரு பெரும் தூண்டுதலாகவும் மாதிரியாகவும் அமைந்தது. அடுத்து கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்பை ஏற்படுத்தவென 'திருச்சபைகளின் உலகப் பேரவை' (World Council of Churches) 1948ம் ஆண்டு நிறுவப்பட்டது. கத்தோலிக்க சபை இதில் உறுப்பினர் ஆகவில்லை. எனினும் 1949இல் உரோமையில் உள்ள நம்பிக்கைக் கோட்பாட்டுப் பேராயம் "ஒற்றுமை இயக்கம் பற்றிய அறிவுரையை" வெளியிட்டு சபைகளுடன் உறவுக்கும் உரையாடலுக்கும் வித்திட்டது.

### கத்தோலிக்க திருச்சபையின் ஈடுபாடு

கத்தோலிக்க திருச்சபை ஒன்றிப்பு முயற்சிகளில் அர்ப்பணத்தோடு ஈடுபாடு காட்டியது. கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான புதிய ஆர்வத்தையும் ஆழமான ஈடுபாட்டையும் கத்தோலிக்க திருச்சபையில் ஏற்படுத்தியவர் "கிறிஸ்தவ ஒன்றிப்பின் திருத்தந்தை" எனப் பெயர் பெற்ற 23ஆம் யோவான் ஆவார். தமது எளிமை, இனிமை, மனத்தாழ்மை எனும் பண்புகளால் "எதிர்ப்பாளர்கள்" எனக் கருதப்பட்ட ஏனைய சபைக் கிறிஸ்தவர்களையும் "சகோதரர்களாக" அணைத்துக் கொண்டார். அவர் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டியபோது அதன் முக்கிய ஒரு நோக்கமாகக் கொண்டிருந்தது. கிறிஸ்தவ ஒன்றிப்பே.

### செபம், தவம், உரையாடல், ஒத்துழைப்பு

'கிறிஸ்தவ ஒன்றிப்பு' என்பது முதலிலே கிறிஸ்தவர்களின் மனதிலே திகழவேண்டும். வெறும் செயற்பாடுகளோடு இந்த முயற்சிகள் முற்றுப்பெறக்கூடாது. கிறிஸ்தவ ஒன்றிப்பின் ஆன்மா செபமாகும். ஒன்றித்த செபமும் தபமும் மக்களை புதுவித நோக்கிற்கு இட்டுச்செல்கின்றது. ஒன்றிப்பிற்கு செபம் ஆன்மாவாக இருப்பதுபோல், உரையாடல் இதற்கு ஓர் அடித்தளமாக உள்ளது. அடுத்து சமூகக் காரியங்களில் சபைகளுக்கிடையிலான ஒத்துழைப்பும் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கு அவசியமாகும். "அவர்கள் ஒன்றாய் இருப்பார்களாக!" என்ற இயேசுவின் இதய வேட்கைக்கு செயல் வடிவம் கொடுப்போம். இயேசுவின் ஒற்றுமைக்கனவு நனவாகப் பாடுபடுவோம்.

**மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,**

**அருட்பணியாளர் தமிழ் நேசன்**

**மன்னா பதிப்பாசிரியர்**

## இளம் பாடகர் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம்



மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரியில் 10ஆம் தரம் பயிலும் மாணவன் செல்வன் சிவராஜ் மனோகரன் திலக்ஷன் அவர்கள் இளம் பாடகர் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் 17ஆம் திகதி மகறகமவில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த இளம் பாடகர் போட்டியிலேயே இவர் இச்சாதனையைப் படைத்துள்ளார். இப்போட்டியில் தேசிய மட்டத்தில் 32 பேர் பங்குபற்றியிருந்தனர். முதலிடம் பெற்ற திலக்ஷனுக்கு தேசிய விருதும், 10,000 ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.

2010ஆம் ஆண்டு மன்னார் தமிழ்ச் சங்கம் நடாத்திய மன்னார் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு கலைநிகழ்வுகளின்போது இவருடைய பாடல் திறமையைத் தமிழ்ப் பேராசிரியர்கள் பாராட்டியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வளரும் இளம் கலைஞரான திலக்ஷனுக்கு மன்னாவின் மனம் நிறைந்த பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

## விவிலியப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதல் இடம்



கடந்த ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதி கம்பஹா மாவட்டத்தில் தேசிய மட்டத்தில் நடைபெற்ற அகில இலங்கை ரீதியிலான விவிலியப் பேச்சுப் போட்டியில் மன்னார் மறைமாவட்டத்தின் பேசாலை பங்கின் மன்/ சென் பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 11ஆம் தர மாணவி வில்லியம் வினிதா பறுணாந்து இடைநிலைப் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

இவர் பேசாலை 8ம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. திருமதி வில்லியம் பறுணாந்து ஜெயராணியின் மூன்றாவது புதல்வியாவார். இவர் ஏற்கனவே மன்னார் கோட்ட மற்றும் மாவட்ட மட்டங்களில் நடைபெற்ற விஞ்ஞானம், கணிதம், தமிழ், ஆங்கிலப் போட்டிகளில் பரிசில்கள் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்கு நன்கு பயிற்சி வழங்கிய ஆசிரியை திருமதி ஜெனிவி பாஸ்கர் குருஸ் அவர்களும் பாராட்டுக்குரியவர்.

முதலிடம் பெற்ற வினிதாவுக்கு மன்னாவின் மனம் நிறைந்த பாராட்டுக்களும், வாழ்த்துக்களும்.

**தகவல் : வாஸ் கூஞ்ஞ**

## மன்னார் மறைமாவட்டம்
### திருவழிபாட்டு நாட்காட்டி - 2016
### தை

01 - இறைவனின் அன்னை தூய கன்னி மரியா கடன் திருநாள்
04 - விவிலிய வாரம் (3-10)
16 - புனித யோசவாஸ் திருவிழா புதுக்காடு, மடுக்கரை
- கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம், (18-25)
புனித செபஸ்ரியார் திருவிழா - தவசிகுளம்,
புனித யோசவாஸ் திருவிழா - தரணிக்குளம்
19 - குழந்தை இயேசு திருவிழா - காந்தி நகர்
20 - தூய செபஸ்ரியார் திருவிழா - மன்னார் பேராலயம், கட்டைக்காடு, கண்டல், முதலியார்கமம், முத்தரிப்புத்துறை, கொண்டச்சிகுடா
24 - மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 35 ஆண்டுகள் நிறைவு (1981)
தூய செபஸ்ரியார் திருவிழா - மறவன்குளம்
25 - புனித பவுல் திருவிழா - பூலார் குடியிருப்பு
30 - மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 35 ஆண்டுகள் நிறைவு (1981) காலை 7.30 மணிக்கு தோட்டவெளி மறைசாட்சியர் அன்னை ஆலயத்தில் கூட்டுத்திருப்பலி நடைபெறும்.
31 - திருப்பாலத்துவசபைத் தினம் (காணிக்கை ஆயர் இல்லத்திற்கு அனுப்பிவைக்கப்படும்.) குழந்தை இயேசு பறணாட்டகல் (ஓமந்தை), ஈச்சளவக்கை, தாஸ்கோட்டம்.

■ மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத் தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## கலையருவி நடாத்திய குடும்ப அர்ப்பணத்தை ஆழப்படுத்தும் புத்தாக்கப் போட்டி முடிவுகள் - 2015

### கவிதைப் போட்டி

**1ம் இடம்:** திரு. ஏ.டி. தேவதாசன் அல்மேடா, பறப்பாங்கண்டல், உயிலங்குளம்.

**2ம் இடம்:** திரு. பே. எட்வேட் அமல்றாஜ், பெரியகோமரசன்குளம், வவுனியா.

**3ம் இடம்:** செல்வி ஜெயப்பிருந்தா மோசஸ், அடம்பன்தாழ்வு, வட்டக்கண்டல்

### கட்டுரைப் போட்டி

**1ம் இடம்:** செல்வி அந்தோனிப்பிள்ளை டிலக்சினி, கங்காணிதீவு, நானாட்டான்.

**2ம் இடம்:** K. ஆன் சஜிதா, மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி.

**3ம் இடம்:** சீ. பேளின் சிந்துஜா, வஞ்சியன்குளம், வங்காலை.

### நாடகப் போட்டி

முதலாம் இடம் : தலைமன்னார் பங்கு.

புத்தாக்கப் போட்டிகளில் பங்கேற்ற அனைவருக்கும் கலையருவியின் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.
- இயக்குனர்

## உண்மை உறைக்கும் கமிலஸ்





## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

- *மன்னா நிர்வாகம்* -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஜனாதிபதி திருத்தந்தையை வத்திக்கானில் சந்தித்தார்



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கும் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த டிசம்பர் மாதம் 14ஆம் திகதி அன்று வத்திக்கான் விசேட வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கைக்குத் தான் பயணம் செய்திருந்தபோது தனக்கு வழங்கப்பட்ட வரவேற்பு தொடர்பில் மகிழ்ச்சி வெளியிட்ட திருத்தந்தை உபசரிப்பும், நட்புறவும் நிறைந்த மக்களையும், இயற்கை அழகையும் கொண்ட ஒரு வளமான நாடு இலங்கை என இலங்கை ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இலங்கையின் ஐக்கியம் மற்றும் சகவாழ்வுக்காக ஜனாதிபதி முன்னெடுத்துச் செல்லும் நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தனது மகிழ்ச்சியை வெளியிட்ட திருத்தந்தை, உலகில் இன்று இடம்பெறும் காலநிலை மாற்றத்தைத் தவிர்ப்பதற்குச் சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்தும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடினார்.

ஆயுத உற்பத்தியைத் தவிர்த்தல், உலகில் போர் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளைத் தவிர்த்தல் என்பவற்றுக்காக எடுக்கப்படவேண்டிய பொருத்தமான நடவடிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்திய திருத்தந்தை, சமாதானத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஒரு தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி தொடர்பில் ஒரு நெருக்கமான அன்பை தனது உள்ளத்தில் உணர்வதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையின் தேசிய ஐக்கியம் மற்றும் சகவாழ்வுக்காக முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு திருத்தந்தையின் ஆசீர்வாதம் ஒரு பெரும் பலம் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இயற்கையின் கத்தோலிக்க மக்கள் மட்டுமன்றி ஏனைய சகல சமய மக்கள் மத்தியிலும் திருத்தந்தை குறித்த ஒரு பெரும் மதிப்பு இருப்பதாகவும் இதன்போது குறிப்பிட்டார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சமாதானத்துக்கும், ஐக்கியத்திற்கும் தன்னை அர்ப்பணித்துள்ள ஒரு தலைவராகத் தான் பார்ப்பதாகக் குறிப்பிட்ட திருத்தந்தை, சமாதானம் மற்றும் ஐக்கியத்தை அர்த்தப்படுத்தும் ஒரு விசேட நினைவுச்சின்னமும், சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக நீதி தொடர்பில் பாப்பரசரினால் வெளியிடப்பட்ட ஒரு நூலும் இச்சந்திப்பின்போது திருத்தந்தையால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

## கிறிஸ்மஸ் தாத்தாக்களின் உலக சாதனை




இயேசுவின் பிறப்பைக் கொண்டாடும் கிறிஸ்மஸ் பண்டிகைக் காலத்தில் கிறிஸ்மஸ் தாத்தா பரவலாகக் கவனத்தை ஈர்த்து வருபவர் என்பதை நாம் அறிவோம்.

கடந்த டிசம்பர் மாதம் 12ஆம் திகதி அன்று ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில் பத்தாயிரம் பேர் கிறிஸ்மஸ் தாத்தா வேடமிட்டு வீதியில் பொடி நடையாக ஓடினர். சிவப்பு நிற முழு அங்கி, கால்களை மூடிய சப்பாத்துக்கள், கழுத்தைச் சுற்றிய வெள்ளைநிறப் பட்டி, வெள்ளைப் பட்டியுடனான சிவப்புத் தொப்பி என்பவற்றை அணிந்துகொண்டு ஆயிரக்கணக்கானவர்கள் வீதிகளை நிறைத்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இவ்வளவு பெரும் எண்ணிக்கையான நத்தார் தாத்தாக்கள் ஒரே இடத்தில் கூடியமை ஏற்கனவே இருந்த சாதனையை முறியடித்துள்ளது.

வழக்கமாக இந்த நிகழ்வு பெருமளவு ஆண்களையே கவர்ந்திழுத்து வந்தாலும் இந்தத் தடவை 6 சதவீதம் பெண்களும் பங்கெடுத்தார்கள் என்று ஏற்பாட்டாளர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். 1000 சிறுவர்களும் இதில் கலந்துகொண்டார்கள். நிகழ்வில் கலந்துகொண்ட ஒவ்வொருவரும் 12 யூரோக்களைச் செலுத்தி இருந்தனர். அதற்குள்ளேயே அவர்களின் கிறிஸ்மஸ் தாத்தா உடை மற்றும் அலங்காரங்களும் உள்ளடக்கப்பட்டன. எஞ்சிய பணம் பல தொண்டு நிறுவனங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

### அருளாளர் அன்னை திரேசாவின் பரிந்துரையால் நிகழ்ந்த புதுமை ஏற்பு

# விரைவில் புனிதர் பட்டம் வழங்கப்படும்!



அருளாளர் அன்னை திரேசாவின் பரிந்துரையால் நிகழ்ந்த புதுமையை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார். திருப்பீட புனிதர்நிலை பேராயத் தலைவர் கர்தினால் ஆஞ்சலோ அமாத்தோ அவர்கள் கடந்த டிசம்பர் 17ஆம் திகதி மாலை திருப்பீடத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்தித்து அன்னை திரேசாவின் பரிந்துரையால் நடந்த புதுமை பற்றிய விபரங்களைச் சமர்ப்பித்தார். அருளாளர் அன்னை திரேசாவைப் புனிதராக அறிவிக்கும் திகதி இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

அருளாளர் அன்னை திரேசா அவர்களின் பரிந்துரையால் நடைபெற்ற புதுமை ஒன்றை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளது ஓர் உண்மையான கிறிஸ்மஸ் கொடை என்று கொல்கொத்தா பேராயர் தாமஸ் டி சொய்சா தெரிவித்தார். இது குறித்து வத்திக்கான் வானொலிக்கு பேட்டியளித்த கொல்கொத்தா பேராயர் அவர்கள், கொல்கொத்தா நகரம் இந்நாளுக்காகக் காத்திருந்ததாகவும், இது குறித்து அனைவரும் மகிழ்வதாகவும் தெரிவித்தார். (அன்னை தெரேசாவின் பரிந்துரையால் நடைபெற்ற புதுமை பற்றிய விபரத்தை அடுத்த மன்னாவில் எதிர்பாருங்கள்.)

## தீவிரவாதிகளின் தாக்குதலிலிருந்து கிறிஸ்தவர்களை பாதுகாத்த முஸ்லிம்கள்

கென்யாவில் பயணிகள் பஸ்ஸொன்றை இஸ்லாமியத் தீவிரவாதிகள் கடத்தி இருந்ததுடன், முஸ்லிம்களையும், கிறிஸ்தவர்களையும் இருவேறு குழுக்களாகப் பிரியுமாறு கோரியிருந்தபோது குறித்த பஸ்ஸில் இருந்த முஸ்லிம்கள் அவ்வாறு குழுக்களாகப் பிரியாது அங்கிருந்த கிறிஸ்தவர்களை தீவிரவாதிகளின் தாக்குதல்களில் இருந்து பாதுகாத்துள்ளனர்.

குறித்த பஸ்ஸை இடைமறித்த தீவிரவாதிகள் கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் இரு வேறு குழுக்களாக பிரியாதுவிடில் அனைவரையும் கொல்வதாக அச்சுறுத்தியிருந்தனர்.

அங்கிருந்தவர்கள் அவ்வாறு குழுக்களாக பிரியாத காரணத்தினால் தீவிரவாதிகளின் தாக்குதல்களில் இருந்து கிறிஸ்தவர்களைப் பாதுகாக்க முடிந்துள்ளது. இருந்தபோதும் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

சோமாலியாவின் எல்லைப் பகுதியில் உள்ள வடகிழக்குக் கிராமமான எய்வக்கில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இத்தாக்குதலை தாமே முன்னெடுத்திருந்ததாக சோமாலியாவைத் தளமாகக் கொண்டியங்கும் அல் சபாப் போராளிக்குழு தெரிவித்துள்ளது.

### யுத்தம் தொடர்பில் பாப்பரசர் கூறிய கருத்துக் குறித்து

# நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி



மக்களை நல்வழிப்படுத்தவே சமயங்கள் எப்பொழுதும் முன்னின்றன. உலகில் தோன்றி மறைந்த மதத்தலைவர்கள் அனைவரும் அதனையே வலியுறுத்தினர் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா தெரிவித்தார்.

கண்டி பொல்கொல்லை மகிந்த ராஜபக்ஷ கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற தேசிய மீலாத் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்.

உலகில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொருவிதமான கலாசாரங்கள் காணப்பட்டன. அவற்றின் மூலம் மனிதன் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த பல்வேறு முயற்சிகளையும் எடுத்துவந்தான். அந்த அடிப்படையில் காலத்திற்குக் காலம் உலக நாடுகளில் மோதல்கள் இடம்பெற்ற வரலாறுகள் உண்டு. குறிப்பாக புத்தர் பிறந்த காலம், அதன்பின் இயேசுநாதர் பிறந்த காலம், பின்னர் முஹம்மது நபி பிறந்த காலம் உட்பட இக்காலப்பகுதிகள் எல்லாவற்றிலும் உலக நாடுகளில் மோதல்களைக் கண்டோம். ஆனால் சமயத் தலைவர்களான அவர்கள் தோன்றி அக்காலப் பிரச்சினைகளைத் தீர்க்கும் விடயத்தில் மனிதப் பண்புகளை உலகிற்கு வழங்கினர்.

இப்போது நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் காலகட்டமும் அதேபோன்று ஒரு காலகட்டமாகும். இன்று உலக நாடுகளில் மோதல்கள் அதிகம் ஏற்படுகின்றன. எனவே மேற்சொன்ன சமயக் கருத்துகள் இன்றைக்கும் தேவையான ஒன்றாக உள்ளன.

இலங்கை வரலாற்றை பொறுத்தவரை 8 தசாப்த காலமாக அடிக்கடி இனமோதல்களை அவதானிக்க முடிந்தது. அதில் கடந்த மூன்று தசாப்தங்களாக மிகக்கசப்பான அனுபவங்களை நாம் பெற்றோம். அதன் மூலம் நாம் கற்ற பாடம் முக்கியமானது. அதுதான் நாளை நல்லதாக இருக்க வேண்டும். அதற்கான சிறந்த நாட்டை உருவாக்க வேண்டும் என்ற சிந்தனைப் போக்காகும்.

இன்று பொதுவாக முஸ்லிம் நாடுகளில் உயிர்ப்பலிகள் அதிகம் இடம்பெறுகின்றன. இதற்கான காரணத்தைத் தேடும் பணியில் பலர் ஈடுபட்டுள்ளனர். அண்மையில் நான் புனித பாப்பரசரைச் சந்தித்தபோது அவர் என்னிடம் கேட்ட ஒரு கேள்வி, நாடுகளுக்கிடையே யுத்தம் அல்லது மோதல் ஏற்படக் காரணம் என்ன என்பது? நான் மௌனமாக இருந்தேன். அதற்கு அவர் கூறிய பதில், நாம் சிந்திக்க வேண்டிய ஒன்று. யுத்தம் அல்லது மோதலுக்கு நாடுகளோ, அரசுகளோ அல்லது தாக்குதல் நடத்தும் பயங்கரவாதியோ காரணம் அல்ல. ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களும் நாடுகளுமே அதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். குறிப்பிட்ட ஒரு மோதலில் இருபக்கமும் ஒரே நிறுவனம் ஆயுதங்களை வழங்குகின்ற நிலைகளைக்கூட அல்லது ஒரே நாடு ஆயுத விற்பனையை மேற்கொள்கின்ற நிலைகளையும் காணமுடிகிறது எனக் கூறினார்.

## நத்தார் தினத்தில் 550 கைதிகள் விடுதலை

நத்தார் பண்டிகையை முன்னிட்டு சிறைக் கைதிகளை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டிருந்தார். நத்தார் தினத்தன்று கைதிகள் விடுவிக்கப்படுவது இது முதன்முறையாகும்.

இதற்கமைவாக சிறு குற்றங்கள் புரிந்த சிறைக்கைதிகளை விடுதலை செய்வதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டதில் நாடளாவிய ரீதியில் 550 சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 8 சிறைக்கைதிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 6 சிறைக் கைதிகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சிறு குற்றங்கள் புரிந்து, நீதி மன்றினால் தண்டப்பணம் அறவிடப்பட்டு, அந்தந்தத் தண்டப்பணத்தைச் செலுத்த முடியாமல் சிறைக்கூடங்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.


உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் அல்லது உரிய குடும்பத்திடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். - **மன்னா நிர்வாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரக்கத்தின் யூபிலி ஆண்டு சிறப்புக் கட்டுரை

# "இறை தந்தைபோல் இரக்கமுள்ளவராய் ..."

- ஜெராட் டீ ரொசய்ரோ (அமதி) -




இறை இரக்கத்தின் ஆண்டை அறிவித்து வெளியிடப்பட்ட அறிக்கையில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் **"இறைத் தந்தைபோல் இரக்கமுள்ளவராய் ..."** இருக்க வேண்டும் என்பதை மையப் பொருளாக எடுத்துள்ளார். இறைவன் இரக்கமுள்ளவர் என்பதை இஸ்ராயேல் மக்களின் இறை வேண்டல்களின் ஒளியில் சுருக்கமாகக் காண்போம்.

### இறைவனின் இரக்கம் என்பது என்ன?

திருவிவிலியத்தில் இறைவனை முதற்கண் இரக்கம் நிறைந்தவராகவே காண்கிறோம் (விப. 3: 7-10). இஸ்ராயேல் மக்கள் அவர்களது விடுதலைப் பயணம் இறைவனின் இரக்கத்தின் விளைவு என்றே நம்பினார்கள். அவர்கள் இறைவனுடன் செய்துகொண்ட உடன்படிக்கையைமீறி, இறைவனுக்குப் பிரமாணிக்கமில்லாமல் வாழ்ந்தபோதெல்லாம் புதுவாழ்வுக்காக இறைவனின் இரக்கத்தையே நாடினார்கள். "இஸ்ராயேலின் ஆயரே செவிசாயும்..." என நம்பிக்கையோடு குரலெழுப்பினார்கள் (திபா. 80). இறைவாக்கினர்கள் இறைவனின் அன்பையும் இரக்கத்தையும் தொடர்புபடுத்தியே மக்களுடன் பேசினார்கள். இறை இரக்கம் இறைவனின் கனிவான செயல்களாகவும், இறைவனின் நீதிச்செயல்களாகவும், இறைவனின் வாழ்வழிக்கும் செயல்களாகவும் எனப் பலவழிகளில் வெளிப்படுவதாக உணர்ந்து அனுபவித்தார்கள். அவர்களின் செபங்களிலும், பாடல்களிலும் தனிமனிதரும், குழுக்களும் இறைவனின் இரக்கத்தை அனுபவித்து வெளிப்படுத்துவதைக் காணலாம்.

### இறைவனின் கனிவான செயல்கள்

இறைவனின் இரக்கத்தை அவரது கனிவான செயல்களில் மக்கள் அனுபவித்தார்கள். "ஆண்டவர் இரக்கமும் கனிவும் உடையவர்; எளிதில் சினம் கொள்ளாதவர்; பேரன்பு கொண்டவர்; எல்லாருக்கும் நன்மை செய்பவர் (திபா. 145: 8-9) "...குணமாக்குகிறார், மீட்கிறார், நலன்களால் நிரப்புகிறார், உரிமை வழங்குகிறார், நம் பாவங்களுக்கு ஏற்ப நடத்துவதில்லை, தண்டிப்பதில்லை, குற்றங்களை அகற்றுகிறார், இரக்கம் காட்டுகிறார்" (திபா. 103: 1-20). "என் தலைவரே, நீரோ இரக்கம் மிகுந்த இறைவன்; அருள் மிகுந்தவர்; பேரன்பும் உண்மையும் பெரிதும் கொண்டவர்" (திபா. 86: 15-16).

### இறைவனின் நீதிச் செயல்கள்

"ஆண்டவர் ஒடுக்கப்பட்டோருக்கான நீதியை நிலைநாட்டுகிறார்; பசித்திருப்போருக்கு உணவளிக்கிறார்; சிறைப்பட்டோருக்கு விடுதலையளிக்கிறார்; பார்வையற்றோரின் கண்களைத் திறக்கிறார்; தாழ்த்தப்பட்டோரை உயர்த்துகிறார்; அனாதைப் பிள்ளைகளையும் கைம்பெண்களையும் ஆதரிக்கிறார்" (திபா. 146: 7-10). இவ்வாறு மக்கள் இறைவனுடைய இரக்கத்தை அவருடைய நீதிச்செயல்களில் கண்டார்கள்.

### இறைவனின் வாழ்வழிக்கும் செயல்கள்

இறைவனின் இரக்கத்தை அனுபவித்த இஸ்ராயேல் மக்கள் இறைவனை ஆயனாகக் கண்டார்கள். புத்துயிர் அளித்து வழிநடத்தும் ஆயனாகக் கண்டார்கள். "ஆண்டவர் என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை... அவர் இளைப்பாறச் செய்கிறார்; நீர்நிலைகளுக்கு அழைத்துச் செல்கிறார்... நீதிவழி நடத்திச் செல்வார்..." (திபா 23).

மேலும், இறைத்தந்தை தம் மக்களை கண்ணோக்குகிறார் என்பது இஸ்ராயேல் மக்களின் நம்பிக்கை. "தமக்கு அஞ்சி நடப்போரையும், தம் பேரன்புக்காகக் காத்திருப்போரையும், ஆண்டவர் கண்ணோக்குகிறார்" (திபா. 33:18). "ஆண்டவரின் கண்கள் உற்றுநோக்குகின்றன. அவர் விழிகள் மானிடரைச் சோதித்தறிகின்றன" (திபா. 11:4). இவ்வாறு கண்ணோக்குவது இறைவனின் இரக்கத்திற்கு ஓர் அடையாளமாக்கப்படுகின்றது.

### இறை பராமரிப்புச் செயல்கள்

இறைவன் பராமரிப்பவர் என்ற திருவிவிலியக் கூற்று இறை இரக்கத்தையே வெளிப்படுத்துகின்றது. இறைவாக்கினர் எரேமியா "நான் உங்களுக்காக வகுத்திருக்கும் திட்டங்கள் எனக்குத் தெரியும் அன்றோ? அவை வளமான எதிர்காலத்தையும், நம்பிக்கையையும் உங்களுக்கு அளிப்பதற்கான நல்வாழ்வின் திட்டங்களே அன்றி, கேடு விளைவிப்பதற்கான திட்டங்கள் அல்ல என்கிறார் ஆண்டவர்" (எரே. 29: 11) எனும் வார்த்தைகளில் இறை பராமரிப்பின் தன்மையை மக்களுக்கு உணர்த்துகிறார்.

"வாழ்வையும் இரக்கத்தையும் எனக்கு வழங்கினீர். என் உயிர் மூச்சை உம் கரிசனை காத்தது" (யோபு. 10:12). இங்கு காத்தது என்ற சொல்லின் மூலம் இறைவன் சந்தித்துப் பராமரிப்பவர் என்பது உணர்த்தப்படுகிறது.

மேலும் மழையும், நிலத்திற்கு வளமும், விளைச்சலும் தருவது இறைவனின் இரக்கத்தின் விளைவு என்பது திருப்பாடல்களில் அதிகம் காணப்படுகிறது (திபா. 65:9-14; 104:14-15; 147:8-9; 145:16). ஆண்டவர் எல்லாருக்கும் நன்மை செய்பவர்; தாம் உண்டாக்கிய அனைத்தின்மீதும் இரக்கம் காட்டுபவர் (திபா. 145: 9) என்பதே இஸ்ராயேலரின் அடிப்படை நம்பிக்கை.

### இறை பிரமாணிக்கச் செயல்கள்

இறைவனின் இரக்கத்தைச் சுட்டிக்காட்ட அன்பு, பரிவு, நன்னயம், கருணை, தயவு, மன்னிப்பு, சாந்தம், ஆதரவு போன்ற இன்னும் பல சொற்களைத் திருவிவிலியத்தில் காணலாம். இறைவனின் இரக்கத்தில் அவரது அருளும் பிரமாணிக்கமும் இணைந்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது (விப. 34:6; 2சாமு.2:6; 15:20; திபா.25:10; 40:11-12; மிக். 7:20). மக்கள் உடன்படிக்கையை மீறியபோதெல்லாம் இறைவன் அவர்களுக்காகக் காத்திருந்தது அவரது பிரமாணிக்கத்தினால்தான் என்பது இங்கே வலியுறுத்தப்படுகிறது. "உனக்கு நான் முடிவில்லாத அன்பு காட்டியுள்ளேன். ஆதலால் தொடர்ந்து உனக்கு அன்பு செய்கிறேன்" (எரே.31:3) என்று இறைவன் கூறுவதாலும், "மலைகள் நிலைசாயினும், குன்றுகள் இடம்பெயரினும், உன்மீது நான் கொண்ட பேரன்போ நிலைசாயாது. என் சமாதான உடன்படிக்கையோ அசைவுறாது" (எசா.54:10) என்ற கூற்றாலும் இறைவனின் இரக்கம் என்றும் தொடர்ந்து நீடிப்பது என்பதை உணரலாம்.

### சிந்திக்க

இஸ்ராயேல் மக்களின் விசுவாச வாழ்வில் இறையிரக்கம் என்பது அவர்களது அனுபவமாகும். அவர்களது வாழ்வின் அனைத்து சூழ்நிலைகளிலும், விழுதல்களிலும், எழுதல்களிலும் தனி நபர்களாகவும், குழுக்களாகவும் இறைவனின் இரக்கத்தைப் பல வழிகளில் அனுபவித்தார்கள். அவர்கள் அனுபவித்து விசுவாசித்த வாழ்வின் வெளிப்பாடே அவர்களது செபங்களும், பாடல்களுமாகும். அவை அம்மக்கள் கடவுளை ஆயனாக, ஆசானாக, தாயும் தந்தையுமாக, சந்திப்பவராக, கண்ணோக்குபவராக எனப்பல உருவங்களிலும், சாயலிலும் கண்டு வாழ்ந்ததை எக்கால மக்களுக்கும் வெளிக்காட்டுகின்றன.

இஸ்ராயேல் மக்களின் இறையிரக்க அனுபவம் நமக்குத்தரும் பாடம் என்ன? இறைவனைப்பற்றி மனிதர்கள் எவ்வாறு அனுபவித்து, உருவகித்துக்கொள்கிறார்களோ, அதற்கமைய தத்தம் வாழ்வையும் வடிவமைத்துக் கொள்கிறார்களா?

# வருடந்தோறும் 35,000 சட்டவிரோத கருக்கலைப்புக்கள் இடம்பெறுகின்றன

வருடந்தோறும் 35,000 சட்டவிரோத கருக்கலைப்புக்கள் இடம்பெறுவதாகச் சுகாதார அமைச்சின் ஆய்வினூடாகத் தெரியவந்துள்ளது.

தகாக பாலியல் உறவு மற்றும் காதல் விவகாரங்கள் என்பவற்றினால் இளவயது யுவதிகள் கருவுறுவதன் காரணமாக இந்தச் சட்டவிரோதக் கருக்கலைப்புச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை ஆய்வினூடாகக் கண்டறியப்பட்டுள்ளது. விரும்பத்தகாத பாலியல் உறவினால் நிகழும் கருவுறுதலின் காரணமாக ஏற்படும் சட்டவிரோத கருக்கலைப்பினால் உயிர் ஆபத்தையும் பல இளவயது யுவதிகள் எதிர்நோக்குகின்றனர். தகாத பாலியல் உறவு, தேவையற்ற கருவுறுல் மற்றும் சட்டவிரோத கருக்கலைப்பு தொடர்பான போதிய அறிவின்மையே இத்தகைய சம்பவங்கள் அதிகரித்துள்ளமைக்கு காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இவை தொடர்பில் இளம் யுவதிகளுக்கும் தாய்மார்களுக்கும் உளவளத்துணை வழங்குவதற்கும் அறிவூட்டல், விழிப்புணர்வூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகிறது. இதற்கமைய, பிரதேச மட்டத்திலும் பாடசாலை மட்டத்திலும் இத்தகைய அறிவூட்டல் மற்றும் விழிப்புணர்வூட்டல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.



Cut-away view of mother's pelvis

வவுனியா, பெரியகோமரசன்குளம்

## கல்வாரி யாத்திரைத்தலத்தின் தவக்கால தியான வழிபாட்டு ஒழுங்குமுறைகள் - 2016



"தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்." (லூக் 6:36)

**அனைவருக்கும் இறை நாமத்தில் வாழ்த்துக்கள்!**

பிறந்திருக்கும் யூபிலி இறையிரக்க ஆண்டில் இறைவனின் பேரன்பையும், பரிவையும், இரக்கத்தையும் அறிந்து, நம்பிக்கைகொண்டு, நன்றிகூறி, அனுபவிக்கவும் அதே இரக்கத்தை அயலவருடன் பகிரவும் அன்னையாம் திருச்சபை அழைத்து நிற்கின்றது.

இதற்கு உதவியாக இறைவார்த்தைக்குச் செவிசாய்த்து, இறைவார்த்தையைத் தியானித்து, அதன்படி வாழ்ந்து, இறை இரக்க மகிழ்ச்சி, சாந்தம், அமைதியின் ஊற்றை அனுபவிக்க உதவியாக பின்வரும் ஆன்மீக நிகழ்வுகள் வவுனியா கோமரசன்குளம் கல்வாரி யாத்திரைஸ்தலத்தில் 2016ம் ஆண்டு தவக்காலத்தில் நடைபெற இருக்கின்றன. இது வெறும் பக்தி முயற்சியல்ல. மாறாக இறை அனுபவத் தேடலாகும். எனவே இதில் கலந்து இறை இரக்கத்தை சுவைக்க அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

### 01. வாரநாட்கள் (Week days)

**I. திங்கள் முதல் வியாழன் வரை :**

- திருப்பலி (கல்வாரி உச்சி) - காலை 11.00 மணி
- திருப்பலி (கல்வாரி உச்சி) - மாலை 2.30 மணி

**II. வெள்ளிக்கிழமை**

- காலை 9.00 மணி திருப்பலி (சிலுவைப்பாதை நிலை ஒன்றிற்கு அருகில்)
- காலை 11.00 மணி சிலுவைப்பாதைத் தியானம்
- பி.ப. 12.00 மணி திருப்பலி (கல்வாரி உச்சி)
- மாலை 4.30 மணி சிலுவைப்பாதையும் திருப்பலியும்
- 11.03.2016 (4ம் வெள்ளி) பாதயாத்திரை
  காலை 10.00 மணி சிலுவைப்பாதையும் திருப்பலியும்.
- 25.03.2016 (6ம் வெள்ளி)
  காலை 9.00 மணி திருப்பலி
  (சிலுவைப்பாதை நிலை 1ற்கு அருகில்)
  திருப்பலி (மலை உச்சி) - மதியம் 12.00 மணி
  நற்கருணை ஆசீர்வாதம் - மாலை 3.00 மணி
  சிலுவைப்பாதையும் திருப்பலியும் - மாலை 4.00 மணி.

### 02. வார இறுதி நாட்கள் (Week end)

**I. சனிக்கிழமை தியானம் :**

- மாணவர்களுக்கு : 1வது சனிக்கிழமை (20.02.2016)
  காலை 9.00 மணி – மாலை 4.30 மணிவரை
- பெற்றோருக்கு : 2வது சனிக்கிழமை (27.02.2016)
  காலை 9.00 மணி - மாலை 4.00 மணி வரை
- இளைஞர்களுக்கு : 3வது சனிக்கிழமை (05.03.2016)
  காலை 9.00 மணி மாலை 4.00 மணி வரை
- பொதுத்தியானம் : 4வது சனிக்கிழமை (12.03.2016)
  காலை 9.00 மணி- மாலை 3.00 மணி வரை
- பொதுநிலைப்பணியாளர்கள் : 5வது சனிக்கிழமை (19.03.2016) காலை 9.00 மணி – மாலை 3.00 மணிவரை

**II. ஞாயிற்றுக்கிழமை:**

சிலுவைப்பாதை - காலை 11.00 மணி
திருப்பலி (கல்வாரி உச்சி) - பி.ப 12.00 மணி

**குறிப்புகள் :**

I. 4ம் வெள்ளி (11.03.2016) தவிர்ந்த ஏனைய அனைத்து நாட்களிலும் காலை 9.00 மணிக்கு நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு மாலை 3.00 மணி – மாலை 4.00 மணி வரை நற்கருணை ஆராதனையும் ஆசிகளும் வழங்கப்படும்.

II. தினமும் காலை 9.30 – மாலை 5.00 மணி வரை பாவசங்கீர்த்தனம் கேட்கப்படும்.

III. சனிக்கிழமை தியானத்திற்கு வருகை தருகின்றவர்களின் தகவல்களை முன்கூட்டியே எமக்குத் தெரியப்படுத்தவும்.

IV. முன்கூட்டியே அறிவிப்பவர்களுக்கு குறைந்த விலையில் மதிய உணவு ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

**V. தொடர்புகளுக்கு;**

♦ பங்குத்தந்தை – 0773454250 ♦ திரு.மாட்டின் - 0774272150
பங்குத்தந்தை, பெரியகோமரசன்குளம், வவுனியா.

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அர்ப்பண வாழ்வின் ஆண்டு

## இலங்கையில் பணியாற்றும் துறவற சபைகள்

மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள துறவற சபைகள் பற்றிய விரிவான கட்டுரை இப்பகுதியில் இடம்பெறும்.

## அமலமரி மறைபரப்பு அர்ப்பணச் சபை

*சபை நிறுவுனர் :* அருட்தந்தை லூயி மரி பரான் OMI

*சபை ஆரம்பம்* : 1952 குயீபெக் மாநிலம், கனடா
1963 - யாழ்ப்பாணம், இலங்கை
1967 - இந்தியா தமிழ்நாடு, கேரளா

*பாப்பிறை அங்கீகாரம்* : 1984

*இன்று இச்சபை வேரோடிய நாடுகள் :* 20

*சபையின் தனிவரம் - CHARISM* :
"வானகத் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற ஒரு தொடர்ச்சியான, தயார்நிலையில் இருந்துகொண்டு, மரி அன்னையின் துணையுடன் பணியாற்றுதலின் வழியாக கிறிஸ்துவின் அன்பை எல்லா இடங்களிலும் வாழ்தல்"


*இலங்கையில் பணியாற்றும் இடங்கள் :*
யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு

*பணிகள் :* கற்பித்தல், மருத்துவப்பணி, அலுவலகங்கள் அரசு, அரசசார்பற்ற, உளநல ஆற்றுப்படுத்தல் பணி, தைத்தல், (Tailaring). எங்கெல்லாம் கிறீஸ்துவுக்கு உரிமையுண்டோ அங்கெல்லாம் இவர்கள் (Oblales) இருப்பார்கள்.

*பங்குத்தளங்களில் :*
ஆன்மீக வழிநடத்துதல், அன்பியங்களைப் பொறுப்பெடுத்து நடாத்துதல், திருவருட்சாதனங்கள் பெற வழிவகுத்தல், குடும்ப வைத்தியசாலைச் சந்திப்பு, ஆலயங்களில் வீடுகளில் நற்கருணை வழங்குதல், மறைக்கல்வி கற்பித்தல்.

மேலும், இச்சபையில் உதவி உறுப்பினராக இணைந்து பணி செய்யும், பெரியோர், சிறார்களின் ஆன்மீக வழிகாட்டிகளாக இருந்து செயற்படுதல்.

*இவர்களின் செபவாழ்வு* : 5-5-5 என்னும் மூன்று 5னுள் அடங்கும். 1 - 5
1. திருப்பலி, 2. தியானம், 3. திருப்புகழ்மாலை, 4. திருசெபமாலை, 5. ஒவ்வொரு நாள் வாழ்வையும் மீளாய்வுசெய்து திரும்பிப்பார்த்தல் (Review of the day).



*வாழ்க்கை முறை* 2 - 5
1. இறைபிரசன்னம், 2. குறை கூறாமை - ஆட்கள்
3. முறையிடாமை - சம்பவம், 4. சேவை உள்ளம் கொண்டிருத்தல்
5. சமாதானத்தின் கருவி

*பிறர் அன்புப்பணி :*
3 - 5 கடைசி 5 பிறர் அன்புப்பணி ஒரு நாளில்

*வாழ்க்கை முறை :*
உலகின் மத்தியில் உப்பாக, ஒளியாக, புளிக்காரமாக வாழ்ந்து, இறை அன்புக்கு சாட்சிபகர்தல். இவர்கள் தங்கள் நெறிக்கோவைக்கு ஏற்ப கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிவு என்னும் வார்த்தைப்பாட்டின் மூலம் தங்கள் அர்ப்பண வாழ்வை வாழ்கின்றார்கள்.

**இச்சபையின் மூலம் தங்கள் வாழ்வை அர்ப்பணித்து வாழ விரும்பும் உள்ளங்கள் தொடர்கொள்ளவும். விபரங்களுக்கு:**
**மட்டக்களப்பு - 077-7603626, 077-5449622**
**கணனி நிலைய வீதி, முத்தமிழ் நகர், மன்னார்.**
**077-6660287, 023-2223288**

## திருவிழா நல்வாழ்த்துக்கள்!



**புனித செபஸ்தியார் திருவிழா ஜனவரி 20**



**புனித யோசவ்வாஸ் திருவிழா ஜனவரி 16**

## IMSESO நிறுவனத்தின் 2016ம் ஆண்டிற்கான திட்டமிடல்ஒன்று கூடல்

**IMSESO** நிறுவனத்தின் 2016ஆம் ஆண்டிற்கான திட்டமிடல் ஒன்றுகூடலானது கடந்த 21-12-2015 திங்கள் அன்று நிறுவனத்தின் தலைவர் திரு. எஸ். கொண்சன்ரைன் தலைமையில் முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முருங்கன் மறைக்கோட்ட முதல்வரும், நிறுவனத்தின் போசகருமான அருட்பணி. S. மாக்கஸ், முருங்கன் டொன் பொஸ்கோ நிறுவனத்தின் இயக்குனர் அருட்பணி. K.P. போல், நானாட்டான் பிரதேச செயளார் M. பரமதாசன் மற்றும் மன்னார் வேள்ட் விஷசன் இயக்குனர், பாடசாலை அதிபர்கள், கிராமசேவகர், சமாதான நீதவான்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.






## இன்றே செல்லுங்கள்
## சஹன மதுர - அமைதியின் தோட்டம்

**மக்களைக் குணப்படுத்துவதிலும் அவர்களுக்கு தொழிலைப் பெற்றுக்கொடுப்பதிலும் 20 வருட அனுபவம்**

### புனர்வாழ்வு நிலையம்

- ஜா எலையில் அமைந்துள்ளது.
- 40 வதிவிட வாடிக்கையாளர்களுக்கு உளவியல் ரீதியான சிகிச்சை வழங்கப்படுகின்றது.
- உளவியல் சிகிச்சையானது தகுதிவாய்ந்த நிபுணர்களால் இயக்குனர் அருட்திரு. கலாநிதி பிராக்சிட் அந்தனி (அமதி) அவர்களின் வழிகாட்டலில் வழங்கப்படுகின்றது. .
- இயக்குனரையும், உளவள நிபுணர்களையும் சந்திக்கவும்.
- இயக்குனர் அவர்கள் அமெரிக்காவின் நி!யோர்க்கில் உள்ள கலிவான் நிலையத்தில் 4 வருடங்கள் உளவள நிபுணராகப் பணியாற்றிய அனுபவம் உடையவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர்.

தற்போது கொழும்பு அக்குவைனஸ் பல்கலைக்கழகத்தில் உளவியல்பீடத் தலைவராகக் கடமையாற்றுகின்றார்.
தொழில் ரீதியான உளவளத் துணையாளராக விளங்குகின்றார்.
- இப்பயிற்சி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 20 வருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது.
பல உளவளத் துணையாளர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.
ஜாஎல, கண்டி, குருநாகலையில் 272 மணித்தியாலங்கள் பயிற்சி வழங்கப்படுகின்றது.

**புணர்வாழ்வுக்கு விண்ணப்பிக்கவும் :**
**011-2235359, 077-6696194, 076-96194**
**ஜாஎல.**
**உளவியல் பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கவும்:**
**081-2201586 (கண்டி) 037-2237147 (குருநாகலை)**


## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

### துயர் பகிர்கின்றோம்

அருட்தந்தை லீனஸ் சொய்சா (அமதி) அவர்களின் அன்புத்தந்தை திருவாளர் அந்தோனியப்பு அதிரியான் சோசை அவர்கள் கடந்த டிசம்பர் மாதம் 12ஆம் திகதி இறைபதமடைந்தார். அன்னாரின் ஆன்மா அமைதிபெறச் செபிப்பதுடன் லீனஸ் அடிகளாருக்கும் குடும்பத்தவர்களுக்கும் மன்னார் மறைமாவட்டத்தின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

### மன்னா பணியாளர்களுக்கான வருடாந்த ஒன்றுகூடல்

மன்னா பத்திரிகை விநியோகத்திற்கு அரும்பணியாற்றிவரும் மன்னா பணியாளர்களுக்கான வருடாந்த கிறிஸ்மஸ் ஒன்றுகூடல் இரு இடங்களில் நடைபெற்றன.

வவுனியா மறைக்கோட்டப் பங்கு விநியோகஸ்தர்களுக்கான ஒன்றுகூடல் கடந்த டிசம்பர் மாதம் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு வவுனியா இறம்பைக்குளம் பங்கு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் 35 விநியோகஸ்தர்கள் கலந்துகொண்டனர். மன்னா பத்திரிகை ஆசிரியர் அருட்பணி தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா பங்குத்தந்தை அருட்பணி. சத்தியராஜ் அடிகளார் கலந்துகொண்டு அன்பளிப்புகளை வழங்கிவைத்தார்.

மன்னார், முருங்கன், மடு மறைக்கோட்டப் பங்கு விநியோஸ்தர்களுக்கான ஒன்றுகூடல் டிசம்பர் மாதம் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்திலும் இடம்பெற்றது. இந்த ஒன்றுகூடலில் 160 விநியோகஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

இந்த ஒன்றுகூடலின்போது மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை அடிகளாரும், மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் திரு. மாட்டின் டயஸ் அவர்களும், தமிழ்த்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். குருமுதல்வர் விநியோகஸ்தர்களுக்குரிய அன்பளிப்புகளை வழங்கிவைத்தார். மன்னா பத்திரிகை விநியோகம் தொடர்பான கருத்துப்பரிமாறல்களும் இந்த ஒன்றுகூடலின்போது இடம்பெற்றது.

### இரக்கத்தின் ஆண்டை முன்னிட்டு குருக்களுக்கான சிறப்புக் கருத்தமர்வு

புதிய ஆண்டாகிய 2016 இரக்கத்தின் ஆண்டாக அகில உலகத் திருச்சபையில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கிறிஸ்தவர்களும் கடைப்பிடிக்க வேண்டுமென திருத்தந்தை பிரான்சிஸ் பிரகடனப்படுத்தியுள்ளதை நாம் அனைவரும் நன்கறிவோம்.

மன்னார் மறைமாவட்டமும் அகில உலகத் திருச்சபையில் ஓர் அங்கம் என்ற வகையில் இந்த வருடம் முழுவதும் மறைமாவட்டக் குருக்கள், துறவிகள் மற்றும் பொதுநிலையினர் ஒன்றிணைந்து இரக்கச் செயல்களில் ஈடுபட்டு பகைமை, பழிவாங்கல், சுயநலம், மன்னிக்காமை, கோபம், பிடிவாதம் போன்ற தீயசக்திகளை முறியடித்து ஒற்றுமை. அமைதி, புரிந்துணர்வு, மன்னித்தல், பகிர்தல், பிறர்நலம் பேணல் போன்ற உயர்ந்த விழுமியங்களை எமதாக்கி நலமான வாழ்வையும் பரந்த உள்ளம் கொண்ட சமூகத்தையும் கட்டியெழுப்பும் நோக்கில் இறைமக்களை வழிநடத்துவதற்குக் குருக்களை தயார்ப்படுத்தும் வகையில் சிறப்புக் கருத்தமர்வு ஒன்று நடாத்தப்பட்டது. கடந்த மார்கழி மாதம் 09ந் திகதி மடுத்தியான இல்லத்தில் காலை 09.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணிவரை இக்கருத்தமர்வு நடாத்தப்பட்டது.

இக்கருத்தமர்வின் நெறிப்படுத்துனர்களாக காலை 9.00மணி முதல் மதியம் 12.00மணிவரை யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. ஜெபரெட்ணம் அடிகளாரும் பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணிவரை அருட்திரு. வின்சன்ற் பற்றிக் O.M.I அடிகளாரும் செயற்பட்டனர்.

அருட்தந்தை ஜெபரெட்ணம் அடிகளார் தமது உரையில் திருத்தந்தை பிரான்சிஸ் உரோமை நகரில் மார்கழி மாதம் 08ந் திகதி இலங்கை நேரப்படி பிற்பகல் 1.30 மணியளவில் தூய பேதுருவானவர் பேராலயத்தின் யூபிலிக் கதவினைத் திறந்து இரக்கத்தின் யூபிலி ஆண்டினை ஆரம்பித்து வைத்தார் எனவும் மார்கழித் திங்கள் 13ந் திகதி ஞாயிறு அன்று உலகின் அனைத்து மறைமாவட்டங்களின் பேராலயங்களிலும் முக்கிய யாத்திரை ஸ்தலங்களிலும் இச்சடங்கானது இறை மக்களின் பிரசன்னத்தில் இடம்பெற வேண்டுமெனக் கேட்டிருப்பதையும் சுட்டிக்காட்டி இரக்கத்தின் ஆண்டு கிறிஸ்தவர்களை மட்டுமல்லாது உலகின் அனைத்து மத சமூகத்தினரையும் அழிவில் இருந்து பாதுகாத்து வாழவைக்கும் ஆண்டாக அமைய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

பிற்பகல் நிகழ்வினை முன்னின்று நடாத்திய அருட்தந்தை வின்சன்ற் பற்றிக் அடிகளார் பழைய ஏற்பாட்டில் இறைத்தந்தையின் இரக்க சிந்தையும், புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் இரக்க சிந்தையும் ஒவ்வொரு மனிதரிலுமிருந்தும் வெளிப்படும்போதுதான் சமூகங்களிடையே ஒன்றிப்பும், தனிமனிதரிடையே மன அமைதியும் ஊற்றெடுத்து ஒன்றுபட்ட சமூகம் கட்டி எழுப்பப்படும் எனக் கூறினார். இக்கருத்தமர்வில் 38 அருட்தந்தையர்கள் பங்கெடுத்துப் பயன்பெற்றனர்.

**மன்னா விநியோகஸ்தர்களே!**
**உங்கள் கைகளுக்குக் கிடைக்கும் மன்னாவை காலம் தாமதிக்காமல் உடனடியாக விநியோகிங்கள்!**
**- மன்னா நிர்வாகம் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையிரக்கத்தின் திருமுகம்

## இறையிரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டை அறிவிக்கும் முகமாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதிய ஆணை மடல் - தொடர் 1

25 எண்களைக் கொண்ட இந்த ஆணை மடல் மன்னாவில் தொடராக வெளியிடப்படும். இறைஇரக்க ஆண்டில் பயணம் செய்யும் நாம் அனைவரும் இதை வாசித்துப் பயனடைவோம்.




1. இயேசுக் கிறிஸ்து இறைத்தந்தையின் இரக்கத்தின் திருமுகம். இந்தச் சொற்றொடர்கள் கிறிஸ்தவ இறை நம்பிக்கையின் மறைபொருளை மிகச்சரியாய் சுருங்கக் கூறுகின்றன. நாசரேத்தூர் இயேசுவிலே இறையிரக்கம் வாழ்கிறதாகவும், காணக்கூடியதாகவும் மாறி அவரிலே அது தன் உச்சத்தை அடைந்தது. "மிகுந்த இரக்கம் உடைய" (எபே 2:4) கடவுள் மோசேவுக்கு தனது திருப்பெயரை "இரக்கமும் பரிவும் உள்ள இறைவன், சினம் கொள்ளத் தயங்குபவர், பேரன்புமிக்கவர், நம்பிக்கைக்குரியவர்" (விப 34:6) என வெளிப்படுத்தியபின், வரலாறு முழுவதும், பல்வகையிலும் தனது இறைத்தன்மையை காண்பிக்கத் தவறியதில்லை. "காலம் நிறைவேறியபோது" (கலா 4:4) அவரின் மீட்புத் திட்டத்தின்படி அனைத்தும் ஏற்பாடு செய்யப்பட்டபோது அவரது அன்பை நமக்கு உறுதியான வழியில் வெளிப்படுத்துவதற்கு, கன்னிமரியாவிடம் பிறந்தவராக தனது ஒரே மகனை இவ்வுலகிற்கு அனுப்பினார். இயேசுவைக் காண்கிறவர்கள் தந்தையைக் காண்கிறார்கள் (யோவா 14:9). நாசரேத்தூர் இயேசு தமது வார்த்தைகளாலும், செயல்களாலும் அவரின் முழு ஆளுமையினாலும் கடவுளின் இரக்கத்தை வெளிப்படுத்துகின்றார்.

2. இறையிரக்கத்தின் மறைபொருளை நாம் தொடர்ந்து தியானிக்க வேண்டும். அது மகிழ்ச்சி, சாந்தம் மற்றும் அமைதி ஆகியவற்றின் ஊற்று ஆகும். நமது மீட்பு அதையே சார்ந்திருக்கின்றது. இறையிரக்கம் எனும் வார்த்தை தூய தமத்திருத்துவத்தின் மறையுண்மையையே வெளிப்படுத்துகின்றது. இறையிரக்கம் என்பது கடவுள் நம்மைச் சந்திக்க வருகின்ற இறுதியான மற்றும் உயர்வான செயற்பாடு. இரக்கம் என்பது வாழ்வின் பாதையில் தனது சகோதரர்கள் சகோதரிகளின் கண்களை நேர்மையோடு உற்றுநோக்குபவர் ஒவ்வொருவரின் இதயத்திலும் வாழும் அடிப்படைச் சட்டமாகும். இறையிரக்கம் என்பது நமது பாவநிலையிலும் நாம் நித்தியமாக அன்புசெய்யப்படுகின்றோம் எனும் எதிர்நோக்கை நமது இதயத்திற்குள் விதைத்து கடவுளையும் மனிதரையும் இணைக்கும் பாலமாகும்.

3. நமது வாழ்வில் இறைத்தந்தையின் செயலின் செயலூக்கமுள்ள அடையாளமாக நாம் மாறும்பொருட்டு இறையிரக்கத்தைக் கூர்ந்துநோக்க சில நேரங்களில் நாம் அழைக்கப்படுகின்றோம். இந்தக் காரணத்துக்காக நம்பிக்கையாளர்களின் சான்று மேலும் உறுதியாகவும் மிகவும் திறனுடையதாகவும் மாறும் காலமாகவும், திருச்சபைக்கு ஒரு சிறப்பான காலமாகவும் இருக்கும்படி இறையிரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டை அறிவித்திருக்கிறேன்.

இப்புனித ஆண்டு புனித கன்னி மரியாளின் அமல உற்பவ பெருவிழாவாகிய டிசம்பர் 8, 2015ல் தொடங்கும். இந்தத் திருவழிபாட்டு விழா மானிட வரலாற்றின் தொடக்கத்தில் இருந்து கடவுளின் செயல்பாட்டை நினைவூட்டுகின்றது. ஆதாம் ஏவாள் ஆகியோரின் பாவத்திற்குபின் கடவுள் மானுடத்தை தீமையின் வேதனைத் துடிப்பிலே தனியே விட்டுவிட விரும்பவில்லை. எனவே அவர் தனது பார்வையைத் தூய அன்பில் மாசற்ற மரியாவின் பக்கம் திருப்பினார். அவரை மானிடரின் மீட்பரின் தாயாகத் தேர்ந்தெடுத்தார். பாவத்தின் கனாகனத்திற்கு எதிராகக் கடவுள் இரக்கத்தின் நிறைவோடு பதிலளிக்கின்றார். இரக்கம் எந்தப் பாவத்தைவிடவும் எப்போதும் பெரிதாய் இருக்கும். மன்னிப்பதற்கு எப்போதும் தயாராயிருக்கும். இறையன்புக்கு யாரும் எல்லைகளை வரையறுக்க முடியாது. அமல உற்பவப் பெருவிழாவின்போது புனித கதவை திறக்கும் மகிழ்வை நான் அடைவேன். அன்று புனித கதவு இரக்கத்தின் கதவாக மாறும். அதன் வழியாக நுழையும் எவரும் ஆறுதலளிக்கும், மன்னிக்கும் மற்றும் நம்பிக்கையை விதைக்கும் கடவுளின் அன்பை அனுபவிப்பர்.

அதற்கு அடுத்த ஞாயிற்றுக்கிழமை, அதாவது திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு உரோமைப் பேராலயத்தின், அதாவது புனித யோவான் லாத்தரன் பசிலிக்காவின் புனித கதவுகள் திறந்து வைக்கப்படும். அதைத் தொடர்ந்த வாரங்களில் திருத்தந்தையின் பிற பசிலிக்காக்களின் புனித கதவுகள் திறக்கப்படும். அதே ஞாயிற்றுக்கிழமை தலத்திருச்சபையின் பேராலயம், பிற துணைப் பேராலயங்கள், சிறப்புமிக்க பிற ஆலயங்கள் ஆகியவற்றில் இரக்கத்தின் கதவை புனித ஆண்டுக்கு திறந்து வைப்பதைப்பற்றிய அறிவிப்பை வெளியிடுவேன். தல ஆயரின் தீர்மானப்படி பெரும் எண்ணிக்கையிலான திருப்பயணிகள் வந்துகூடும் ஏதாவது திருத்தலத்தின் கதவுகளை திறந்துவைக்கலாம். ஏனெனில் இத்தகைய புனித இடங்களுக்குச் செல்வதால் மக்கள் மனமாற்றத்திற்கான பாதையைக் கண்டுபிடிப்பதால் அவை அருள் நிறைந்த நேரங்களாக அமைகின்றன. இவ்வாறு, ஒவ்வொரு தலத்திருச்சபையும் அருளின் மற்றும் ஆன்மீக மறுமலர்ச்சியின் தனிச்சிறப்பான காலமான இந்த புனித ஆண்டை வாழ்வதில் பங்கெடுக்கும். இதன்படி யூபிலி ஆண்டு உரோமையிலும் அகில உலகத் திருச்சபையோடு உள்ள ஒன்றிப்பின் காணக்கூடிய அடையாளமாகக் கொண்டாடப்படும்.

4. நான் டிசம்பர் எட்டாம் தேதியை தேர்ந்தெடுக்க அது அண்மைக்கால திருச்சபை வரலாற்றில் கொண்டிருக்கும் சிறப்பு காரணமாகும். உண்மையில் நான் இரண்டாம் வத்திக்கான் சங்க நிறைவின் ஐம்பதாவது ஆண்டில் புனித கதவுகளைத் திறந்து வைப்பேன். இந்த நிகழ்வை உயிர்த்துடிப்புள்ளதாக வைத்திருக்கவேண்டிய பெரும் தேவையை திருச்சபை உணர்கின்றது. இத்திருச்சங்கத்தின் வழியாக திருச்சபை தன் வரலாற்றின் முக்கியமானதொரு காலகட்டத்திற்குள் நுழைந்தது. தூய ஆவியின் உண்மையான உயிர் மூச்சுபோல திருச்சங்க தந்தையர்கள் கடவுளைப்பற்றி அவர்கள் காலத்து ஆடவரும் பெண்டிரும் அவர்களுக்கு புரியும்படி பேசவேண்டிய தேவையை உணர்ந்திருந்தனர். திருச்சபையை வெகுகாலமாக ஒரு கோட்டைபோல வைத்திருந்த சுவர்கள் உடைக்கப்பட்டன.

நற்செய்தியை புதிய முறையில் அறிவிக்க வேண்டிய நேரம் வந்தது. தொடக்கத்தில் இருந்துவந்த அதே நற்செய்தி அறிவிப்பின் புதிய காலகட்டமாக அது இருந்தது. ஒரு புதிய உற்சாகத்துடனும், பற்றுறுதியுடனும், தங்களின் இறை நம்பிக்கைக்கு அனைத்து கிறிஸ்தவர்களும் சான்றுபகர்வதற்கு ஏற்றுக்கொண்ட புதிய கடமையாக இருந்தது. இறைத்தந்தையின் அன்புக்கு வாழும் அடையாளமாக இவ்வுலகில் இருக்கவேண்டிய பொறுப்பைத் திருச்சபை உணர்ந்தது. திருச்சங்கத்தைத் தொடங்கிவைத்து, நடைபயில வேண்டிய பாதையை சுட்டிக்காட்டி புனித இருபத்தி மூன்றாம் யோவான் கூறிய அர்த்தமுள்ள வார்த்தைகளை நாம் நினைவுகூருகின்றோம்: "இப்போது கிறிஸ்துவின் மணவாட்டி கொடுங்கோன்மையின் ஆயுதங்களை எடுப்பதற்குப் பதிலாக இரக்கத்தின் மருந்தினை பயன்படுத்த விரும்புகிறாள். இந்தத் திருச்சங்கத்தில் கத்தோலிக்க திருச்சபை தனது கத்தோலிக்க உண்மையெனும் தீப்பந்தத்தை உயர்த்திப்பிடிக்கின்ற வேளையில், பொறுமையும், இரக்கமும் கொண்டு தனது பிரிந்த பிள்ளைகள்பால் கொண்ட பரிவிரக்கம் மற்றும் நன்மைத்தனத்தால் உந்தப்பட்டு தன்னை எல்லோருக்கும் ஓர் அன்புத்தாயாகக் காட்ட ஆசிக்கின்றாள்".

முத்திபேறுபெற்ற ஆறாம் பவுல் இதே தொனியில் திருச்சங்கம் முடியும்போது இவ்வாறு பேசினார்: "அன்பே இந்தத் திருச்சங்கத்தின் சமயக்கருத்தாய் இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்." பழைய நல்ல சமாரியனே திருச்சங்கத்தின் ஆன்மீகத்தின் மாதிரியாய் இருந்துள்ளது. "திருச்சங்கத்திலிருந்து பாசமும் பாராட்டுதலுமான அலை நவீன மானுட உலகின்மீது பாய்ந்தோடியது. தவறுகள் கண்டிக்கப்பட்டன என்பது உண்மைதான். உண்மை இதை வற்புறுத்துவதைப்போலவே பிறரன்பும் இதை வலியுறுத்துகின்றது. ஆனால் தனி நபர்களுக்கு இங்கு அறிவுறுத்தலும், மதிப்பும், அன்பும் மட்டுமே இருந்தது. காரண காரியங்களைத் தோண்டி சலிப்படைவதற்குப் பதிலாக உற்சாகமூட்டும் தீர்வுகள் இருந்தன. பயமூட்டும் தீர்க்கதரிசனங்களைவிட நம்பிக்கையின் செய்திகள் திருச்சங்கத்திலிருந்து நிகழ்கால உலகுக்கு அளிக்கப்பட்டன. நவீன உலகின் மதிப்பீடுகள் மதிக்கப்பட்டதோடு மரியாதை செய்யப்பட்டன, அதன் முயற்சிகள் அங்கீகரிக்கப்பட்டன, அதன் ஆசைகள் சுத்திகரிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டன." நாம் இன்னொரு கருத்தையும் வலியுறுத்த வேண்டும். இந்த உயரிய போதனையெல்லாம் எல்லா நிலையிலும் எல்லா பலவீனத்திலும் தேவையிலுமிருக்கும் மானுடத்திற்கான பணி எனும் ஒரு திசையிலேயே ஒருமுகப்படுத்தப்பட்டன." திருச்சபை பெற்றுக்கொண்ட எல்லாவற்றிற்கும் நன்றியுணர்வுடனும், நம்முன்னே நிற்கும் பணியைப்பற்றிய பொறுப்புணர்வுடனும், நம்முடைய திருப்பயணத்தில் நம்மைத் திடப்படுத்தும் உயிர்த்த ஆண்டவரின் ஆற்றல் நம்மை பாதுகாக்கும் எனும் முழு நம்பிக்கையுடனும் நாம் இந்த புனித கதவைத் தாண்டிச் செல்வோம், கிறிஸ்துவால் கொணரப்பட்ட மீட்புப் பணியில் ஒத்துழைக்கும் நம்பிக்கையாளர்களின் பாதங்களை வழிநடத்தும் தூய ஆவி, இறைமக்களை வழிநடத்தி திடப்படுத்துவாராக, எனவே அவர்கள் இறையிரக்கத்தின் முகத்தைத் தியானிப்பார்களாக.

5. யூபிலி ஆண்டு நவம்பர் 20/ 2016ல் கிறிஸ்து அரசர் வழிபாட்டு பெருவிழாவுடன் நிறைவுபெறும், அன்று நாம் புனித கதவுகளை மூடும்போது ஒரு தனிச்சிறப்பான அருளின் காலத்தை தந்ததற்காக தூய தமத்திரித்துவத்திற்கு நன்றியுணர்வுடன் நமது இதயங்கள் நிறைத்திருக்கும். திருச்சபையின் வாழ்வையும், மானுடம் முழுமையையும், பிரபஞ்சம் முழுமையையும் நமதாண்டவர் கிறிஸ்துவின் ஆளுகையில் அர்ப்பணித்து, காலைப் பனிபோல நம்மீது அவர் இரக்கத்தைப்பொழியும்படி அவ்வேளையில் வேண்டுவோம். இதனால் எல்லோரும் இணைந்து ஒளிமயமான ஓர் எதிர்காலத்திற்காக உழைக்க முடியும். ஒவ்வொரு ஆணிடமும் பெண்ணிடமும் நாம் சென்று இறைவனின் நன்மைத்தனத்தையும், மென்மையையும் கொண்டுவருவதற்காக வரவிருக்கும் ஆண்டு இறையிரக்கத்தால் நிறைவிக்க வேண்டும் என நான் எவ்வளவோ ஆர்வமாய் உள்ளேன்! இரக்கத்தின் நறுமணம் எல்லோரையும், நம்பிக்கையாளர்களையும், தொலைவில் உள்ளோரையும், நம்மிடையே இறையாட்சி ஏற்கெனவே உள்ளது என்பதன் அடையாளமாகச் சென்றடைவதாக!

6. "இறைவன் தனது இரக்கத்தைச் செயல்படுத்துவது முறையானதே. இதன் வழியாக அவர் தனது ஆற்றலை வெளிப்படுத்துகின்றார்" எனும் புனித தோமா அக்குவினாவின் வார்த்தைகள் கடவுளின் இரக்கம் அவரது பலவீனத்தின் அடையாளமாக அல்ல, மாறாக அவரது ஆற்றலை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. இக்காரணத்துக்காக ஒரு மிகப்பழமையான சபை மன்றாட்டு "உமது ஆற்றலை எல்லாவற்றிற்கும் மேலாக உமது இரக்கத்திலும் மன்னிப்பிலும் வெளிப்படுத்தும் கடவுளே!" என்று செபிக்க நம்மை அழைக்கின்றது. மானுட வரலாறு முழுவதும் கடவுள் எப்பொழுதும் அண்மையில் இருப்பவராக, பராமரிக்கிறவராக, தூயவராக மற்றும் இரக்கமுடையவராக இருப்பார். கடவுளின் இறைத்தன்மையை விவரிக்கின்றபோது பழைய ஏற்பாட்டில் "பொறுமையும் இரக்கமும்" எனும் இவ்விருவார்த்தைகள் பெரும்பாலும் இணைந்தே செல்கின்றன. கடவுளின் நன்மைதனம் அவரது தண்டனை மற்றும் அழிப்பைவிட உயர்ந்து நிற்கும். மீட்பின் வரலாறு முழுவதும் அவர் இரக்கமுடையவராய் இருப்பது பல்வேறு செயல்பாடுகள் வழியாக எண்பிக்கப்படுகின்றன. சிறப்பானவிதத்தில் திருப்பாடல்கள் அவரது இரக்கச்செயலின் பெருமையை முன்னிலைப்படுத்துகின்றன: "அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கின்றார். உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றார். அவர் உன் உயிரைப் படுகுழியினின்று மீட்கின்றார்: அவர் உனக்குப் பேரன்பையும் இரக்கத்தையும் மணிமுடியாகச் சூட்டுகின்றார்" (திபா 103: 3-4).

இன்னொரு திருப்பாடல் இன்னும் வெளிப்படையான வகையில் அவரின் இரக்கச் செயல்களை எடுத்துரைக்கின்றது. "ஆண்டவர் ஒடுக்கப்பட்டோருக்கான நீதியை நிலைநாட்டுகின்றார்; பசித்திருப்போர்க்கு உணவளிக்கின்றார்; சிறைப்பட்டோர்க்கு விடுதலை அளிக்கின்றார்; ஆண்டவர் பார்வையற்றோரின் கண்களைத் திறக்கின்றார்; தாழ்த்தப்பட்டோரை உயர்த்துகின்றார்; நீதிமான்களிடம் அன்புகொண்டுள்ளார். ஆண்டவர் அயல்நாட்டினரைப் பாதுகாக்கின்றார்; அனாதைப் பிள்ளைகளையும் கைம்பெண்களையும் ஆதரிக்கின்றார்; ஆனால் பொல்லாரின் வழிமுறைகளைக் கவிழ்த்து விடுகின்றார்' (திபா 146: 7-9). திருப்பாடலாசிரியரின் வேறு சில வார்த்தைகளை இவண் தருகின்றேன்: "உடைந்த உள்ளத்தோரைக் குணப்படுத்துகின்றார். அவர்களின் காயங்களைக் கட்டுகின்றார். ஆண்டவர் எளியோர்க்கு ஆதரவளிக்கின்றார். பொல்லாரையோ தரைமட்டும் தாழ்த்துகின்றார்" (திபா 147:3,6). சுருங்கக்கூறின், கடவுளின் இரக்கம் என்பது வெறும் அருபியான கருத்தியல் அன்று. மாறாக ஒரு தந்தையைப்போல தாயைப்போல தங்களின் பிள்ளைக்காக இதயத்தின் ஆழத்தில் உருகுவதைப்போல நிஜமானது. இது மிகவும் "ஆத்மார்த்தமான" அன்பு என்று சொல்லுவது மிகையாகாது. மென்மையும், பரிவும், சிறப்புரிமையும், இரக்கமும் கொண்டு அது இயற்கையாக ஆழ்மனத்தினின்று ஊற்றெடுத்து ஓடுகின்றது.

7. "என்றும் உள்ளது அவரது பேரன்பு" என்பது கடவுளின் வெளிப்பாட்டு வரலாற்றை விளக்கும் திருப்பாடல் 136ன் ஒவ்வொரு அடியின் பதிலுரையாக அமைந்துள்ளது. இறையிரக்கத்தினால் பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிகள் எல்லாம் உயர்ந்த மீட்பின் முக்கியத்துவம் கொண்டு வளமாய் விளங்குகின்றன. இஸ்ராயேலோடு கொண்ட கடவுளின் வரலாற்றை இறையிரக்கம் மீட்பின் வரலாறாக மாற்றிவிடுகின்றது. திருப்பாடல் சொல்வதுபோல "என்றும் உள்ளது அவரது பேரன்பு" என்று தொடர்ந்து திரும்ப திரும்பச் செபிப்பது காலத்தையும், இடத்தையும் கடந்து அனைத்தையும் நித்திய அன்பின் மறைபொருளுக்குள் இணைக்கின்றது. இது வரலாற்றில் மட்டுமல்ல நித்தியத்திற்கும் மனிதர் இறைத்தந்தையின் இரக்கம்மிகு பார்வையின்கீழ் இருப்பர் என்று கூறுவதுபோலுள்ளது. இஸ்ராயேலர் இந்தப் பெரும் புகழ்ச்சிப் பாடலைத் தங்களின் முக்கிய திருவழிபாட்டு விழாக்களில் இணைக்க விரும்பியது ஏதோ தற்செயலாய் நிகழ்ந்துவிட்ட ஒன்று அல்ல.

இயேசு தனது பாடுகளுக்கு முன்பாக இந்த இரக்கத்தின் திருப்பாடலைப் பாடினார். புனித மத்தேயு தனது நற்செய்தியில், "அவர்கள் (இயேசுவும், சீடர்களும்) புகழ்ப்பாடல் பாடிவிட்டு ஒலிவமலைக்குச் சென்றார்கள்" (மத். 26:30) என இதைப் பதிவு செய்கின்றார். இயேசு தனது நிலைத்த நினைவாகவும், தனது பாஸ்காப் பலியின் நினைவாகவும் நற்கருணையை ஏற்படுத்தியபோது அவர் இந்த மிக உயர்ந்த இறைவெளிப்பாட்டுச் செயலை அவரது இரக்கத்தின் ஒளியில் அடையாளமுறையில் அமைத்தார். அதே இரக்கத்தின் பின்னணியில்தான் அவர் சிலுவையின் அன்பின் பெரும் மறைபொருளை நிறைவுள்ளதாக்குகின்றதை அறிந்தவராய் அவர் தனது பாடுகள், மரணம் ஆகியவற்றுக்குள் நுழைந்தார். கிறிஸ்துவே இத்திருப்பாடலை செபித்தார் என்பதை அறிந்து கிறிஸ்தவர்களாகிய நமக்கு "என்றும் உள்ளது அவரது பேரன்பு" என்னும் புகழ்ச்சி வார்த்தைகளை நமது அன்றாட வாழ்விலும் எடுத்து செபிப்பது முக்கியமானதாகும்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# மதக் கோட்பாடுகளை பாதுகாக்க புதிய அரசு கடமைப்பட்டுள்ளது

### நீர்கொழும்பு 16ஆவது பெனடிக் உயர்கல்வி நிலைய திறப்பு விழாவில் ஜனாதிபதி

எந்தவொரு மதக்கோட்பாடும் மற்றுமொரு மதக்கோட்பாட்டினால் அடிமைப்படுத்தப்படக்கூடாதென ஜனாபதி தெரிவித்தார். கடந்த 27.12.2015 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நீர்கொழுப்பு 16ஆவது பெனடிக் உயர்கல்வி நிலைய திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இத்தாலி ஆயர் சம்மேளனத்தின் உதவியின்கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள இவ் உயர்கல்வி நிலையத்தில் சாதாரண தரத்திலும் உயர் தரத்திலும் கல்வி கற்ற மாணவர்களுக்கும் ஏற்கனவே தொழில் புரியும் நபர்களுக்குமான ஆங்கிலம், தகவல் தொழில் நுட்பம், வெளிநாட்டு மொழிக் கல்வியை வழங்குவதற்கான வசதிகள் காணப்படுகின்றன.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி, நாட்டின் மதக்கோட்பாடுகளைப் பாதுகாப்பதற்கு புதிய அரசு கடமைப்பட்டுள்ளதெனத் தெரிவித்தார். வர்த்தக சமூகத்துடன் சீர்கெட்டுள்ள ஒட்டுமொத்த சமூகத்தைக் குணப்படுத்துவதற்கு மதக்கோட்பாடுகள் அன்றி வேறு உயரிய கோட்பாடுகள் எதுவும் கிடையாதெனவும் ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டார்.

தனது அறிவு, ஞானம் மற்றும் அனுபவம் ஆகியவற்றை தனிப்பட்ட வாழ்விற்காகவும் ஒட்டுமொத்த மனித சமூகத்தின் நலனுக்காகவும் பயன்படுத்துதல் அனைவரினதும் பொறுப்பாகுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

நினைவுப் பேழையை திரை நீக்கம் செய்து 16ஆவது பெனடிக்



உயர்கல்வி நிலையத்தை திறந்துவைத்த ஜனாதிபதி அதனை மேற்பார்வை செய்தார்.

ஜனாதிபதியின் வருகையை நினைவுகூர்ந்து உயர்கல்வி நிலைய வளவில் வெண்சந்தன மரக்கன்றினை நடும் நிகழ்வும் இடம்பெற்றது. கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித், முன்னாள் பேராயர் ஒஸ்வோல் கோம்ஸ், இத்தாலி பேராயர் சம்மேளனத்தின் தலைவர் கர்தினால் அஞ்சலோ பெகன்கோ, சபாநாயகர் கரு ஜயசூரிய, அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோதாபய ராஜபக்ஷ்ச உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# யாழ் ஆயர் இல்லத்தில் இலங்கை ஜனாதிபதி



யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் கடந்த டிசம்பர் மாதம் 22ஆம் திகதி யாழ்ப்பாண ஆயர் இல்லத்திற்குச் சென்று ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்து உரையாடினார்.

# இலங்கையின் நீதிக்கட்டமைப்பு பலவீனமானது

### இதனாலேயே குற்றங்கள் நிரூபிக்கப்படாமல் கைதிகள் தடுப்பில் உள்ளனர்

**கர்தினால் மல்கம் ரஞ்சித்**

இலங்கையின் நீதித்துறைக் கட்டமைப்பு பலவீனமாகவுள்ளமையால் பெரும்பாலான குற்றச்சாட்டுக்கள் சரியாக நிருபிக்கப்படாமல் சிறைக் கைதிகள் தடுத்துவைக்கப்படுகின்றனர்.

இவ்வாறு கொழும்பு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். அத்துடன் சட்டத்தரணிகள் வழக்குகளைப் பிற்போடுவதனால், உடனடியாகத் தீர்க்கப்படவேண்டிய வழக்குககள் வருடக்கணக்கில் தாமதப்படுத்தப்படுகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நத்தார் தினத்தை முன்னிட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதில் கர்தினால் மல்கம் ரஞ்சித் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, பெரும்பான்மையான நேரங்களில் எமது நாட்டிலுள்ள நீதிக்கட்டமைப்புக்கமைய குற்றச்சாட்டுக்கள் சரியாக நிருபிக்கப்படாமல் சிறைக்கைதிகள் இருக்கின்றனர். இல்லாவிட்டால் பல்வேறு காரணங்களால் சிறைக்குச் சென்றவர்கள், தண்டப்பணம் செலுத்த முடியாதவர்கள், நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் சரியாக முன்னெடுக்கச் சந்தர்ப்பம் கிடைக்காதவர்கள் இருக்கின்றனர்.

இதனூடாக நான் நீதித்துறையை அவமரியாதைக்கு உட்படுத்தவில்லை. எமது நீதித்துறைக் கட்டமைப்பு மிகவும் பலவீனமாகவுள்ளது என்றே கூறுகின்றேன். வழக்கு விசாரணைகளை மேற்கொண்டு அவற்றை முடிக்கவேண்டும். இல்லாவிட்டால், தண்டனை வழங்க வேண்டும். இவை எதையும் செய்யாமல் இருப்பதையே அவதானிக்க முடிகின்றது. இதனை அரசு கவனத்தில்கொள்ள வேண்டும் என்றார்.

## யாழ். ஆயருடன் டக்ளஸ் தேவானந்தா சந்திப்பு

யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ். மறைமாவட்ட ஆயராக நியமிக்கப்பட்டுள்ள ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன் ஆயருடன் சமகால அரசியல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராஜா, முன்னாள் மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கலை இலக்கிய நிகழ்வுகள்

## மன்னார் அமுதனின் கவிதை நூல் வெளியீடும் குறும்படக் காட்சிப்படுத்தலும்

மன்னார் அமுதனின் "அன்ன யாவினும்" என்ற பெயரிலான கவிதை நூல் வெளியீடும், குறும்படக் காட்சிப்படுத்தலும் கடந்த நவம்பர் மாதம் 14ஆம் திகதி மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்றது.

மன்னார் தமிழ்ச்சங்கத் தலைவர் சிவஸ்ரீ தர்மகுமாரக் குருக்களின் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில் முதன்மை விருந்தினராக அருட்பணி. தமிழ்நேசன் அடிகளாரும், சிறப்பு விருந்தின்ர்களாக மருத்துவர் லோகநாதன், மருத்துவர் அரவிந்தன், பொறியியலாளர் இராமகிருஷ்ணன், கலாபூஷணம் அ. அந்தோனிமுத்து ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தமிழ்மொழி வாழ்த்தை திருமதி. மைதிலி அமுதனும், வரவேற்புரையை கவிஞர் ந. பிரதீப்பும், நூல் நயப்புரையை ஜே. சி. டிலானியும், குறும்பட விமர்சனத்தை எஸ். ஏ. உதயனும், சிறப்புரையை கவிஞர் மயூரனும், ஏற்புரையை மன்னார் அமுதனும், நன்றியுரையை திருமதி. வாசுவதா தில்லைநாதனும் ஆற்றினர். மேலும் ஸ்ரீசாகித்ய நடனக்கல்லூரி மாணவிகளின் நடனமும், இன்னிசைக்கீதங்களும் இந்த நிகழ்வுக்கு மெருகூட்டின.

## சிறப்பாக இடம்பெற்ற மன்னார் பிரதேச இலக்கிய விழா

மன்னார் பிரதேச செயலகமும், மன்னார் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த மன்னார் பிரதேச இலக்கிய விழா கடந்த ஒக்ரோபர் மாதம் காலை 9.00 மணிக்கு மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியில் சிறப்க் கலைஞர் ஜே. சி. லியோன் அரங்கில் விமரிசையாக நடைபெற்றது.

மன்னார் பிரதேச கலாசாரப் பேரவையின் தலைவரும், மன்னார் பிரதேச செயலாளருமான திரு. கே.எஸ். வசந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இலக்கியம் தொடர்பிலான கருத்துரைகள், பல்வேறு கலைநிகழ்வுகள், பட்டிமன்றம் போன்றவை இடம்பெற்றன.

அத்துடன் விழாவின் சிறப்பு அம்சமாக 'மன்னல் - 2015' என்ற மலரும் வெளியிடப்பட்டது. குறித்த மலரை மன்னார் பிரதேச செயலாளர் கே. எஸ். வசந்தகுமார் வெளியிட்டு வைத்தார்.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் எம். வை. எஸ். தேசப்பிரியவும், விசேட விருந்தினராக மன்னார் மாவட்ட ஓய்வு நிலை அரச அதிபர் எஸ்.எம்.குரூஸ் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி. நந்தினி ஸ்ரான்லி டிமெல், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் செ. வனஜா ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக நானாட்டான் பிரதேச செயலாளர் எம். பரமதாசன், முசலி பிரதேச செயலாளர் செ. கேதீஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் எழுத்தாளர், ஆசிரியர்கள், கலைஞர்கள், மாணவர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.

## ஊடகத்துறை சார்ந்த இரு நூல்கள் வெளியீடு



ஊடகத்துறை சார்ந்து அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் எழுதிய "செய்தி நடத்துநர் பணியின் அடிப்படைகள்" மற்றும் "நேரலைப் பத்திரிகையியல் ஒரு அறிமுகம்" எனும் ஊடகத்துறை சார்ந்த நூல்களின் வெளியீட்டு விழா கடந்த 28.12.2015 அன்று பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நூல்கள் யாழ் ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் முன்னிலையில் வெளியிடப்பட்டன. அத்துடன் கத்தோலிக்கத் துறை சார்ந்தும் பத்திரிக்கைத்துறை சார்ந்தும் சிறப்பாகச் செயற்பட்ட ஊடகவியலாளர்களும் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் நூலுக்கான ஆய்வுரைகளை யாழ் பல்கலைக் கழக ஊடகத்துறை விரிவுரையாளர் கிருத்திகா தர்மராஜா வழங்கினார். யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் பி. ஜே. ஜெபரட்ணம் அடிகளார், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை பகுதித் தலைவர் எ. ஆர். விஜயகுமார், யாழ். இலக்கிய வட்டச் செயலாளர் கி. கிருபானந்தா, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் க. சிறிகணேசன் ஆகியோர் ஆசியுரை வழங்கினர். இந்த நிகழ்வில் ஊடகத்துறை மாணவர்கள், பொதுமக்கள், ஊடகவிலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையம் 'கலையருவி' நடாத்திய

# புனித செசிலியா விருது

## மாபெரும் கரோல் பாடல் இறுதிப் போட்டியும் விருது விழாவும்



விழாவுக்கு அழைக்கப்பட்ட விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுகின்றனர்



மங்கள விளக்கேற்றல்



இறைவணக்கம்



வரவேற்புரை



தலைமையுரை



சபையோர்



நடன நிகழ்வுகள் - மன்னார் நாட்டியக் கலாலயா மாணவர்கள்



இறுவட்டு வெளியீடு



கட்டுரை, கவிதை போட்டிகளில் விருது பெற்றவர்கள்



புத்தாக்கப் போட்டியில் முதலிடம் பெற்ற நாடகம் - தலைமன்னார் பங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையம் 'கலையருவி' நடாத்திய

# புனித செசிலியா விருது

## மாபெரும் கரோல் பாடல் இறுதிப் போட்டியும் விருது விழாவும்

### கீழ்ப்பிரிவு ஆங்கிலம்



(1ம் இடம் - பேசாலைப் பங்கு)

### மேற்பிரிவு ஆங்கிலம்



(1ம் இடம் - தோட்டவெளிப் பங்கு)



(2ம் இடம் - தாழ்வுபாடு பங்கு)



(2ம் இடம் - மன்னார் பேராலயப் பங்கு)



(3ம் இடம் - அடம்பன் பங்கு)



(3ம் இடம் - வங்காலைப் பங்கு)



(4ம் இடம் - வேப்பங்குளம் பங்கு



(4ம் இடம் - நானாட்டான் பங்கு)

### கீழ்ப்பிரிவு தமிழ்



(1ம் இடம் - பேசாலைப் பங்கு)

### மேற்பிரிவு தமிழ்



(1ம் இடம் - தோட்டவெளிப் பங்கு)



(2ம் இடம் - தாழ்வுபாடுப் பங்கு)



(2ம் இடம் - வங்காலைப் பங்கு)



(3ம் இடம் - வேப்பங்குளம் பங்கு)



(3ம் இடம் - வவுனியாப் பங்கு)



(4ம் இடம் - சிலாவத்துறைப் பங்கு)



(4ம் இடம் - மன்னார் பேராலயப் பங்கு)

மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையமான 'கலையருவி' அமைப்பின் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்டப் பங்குகளுக்கிடையில் நடாத்தப்பட்ட புனித செசிலியா விருதுக்கான மாபெரும் கரோல் பாடல் போட்டியின் இறுதிப் போட்டியும் விருது விழாவும் கடந்த 19.12.2015 அன்று சனிக்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

கலையருவி அமைப்பின் இயக்குனர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. ஏ. விக்ரர் சோசை அடிகளார் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக முருங்கன் மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு. எஸ். மாக்கஸ் அடிகளார், டிலாசால் ஆங்கில மொழிப் பாடசாலை அதிபர் அருட்சகோதரர் கே. எஸ். யோகநாதன், லூயி முன்பள்ளி அதிபர் அருட்சகோதரி றீற்றா குணநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர். கௌரவ விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்ட வின்சன் டிபோல் மத்திய சபையின் செயலாளரும், மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவையின் பொருளாளருமான திருமதி. ஏ. ஆபிரகாம் சோசை அவர்களும், மன். புனித சவேரியார் பெண்கள் தேசிய கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் செல்வி சியாமிளா கிறிஸ்தோப்பர் அவர்களும் கலந்துகொண்டனர்.

கடந்த 12ஆம் திகதி சனிக்கிழமை புனித செபஸ்தியார் பேராலய வளாகத்தில் நான்கு பிரிவுகளாக நடைபெற்ற ஆரம்பப் போட்டியில் பல்வேறு பங்குகளைச் சார்ந்த 38 பாடகர் குழுக்கள் பங்கேற்றிருந்தன. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் நான்கு குழுக்கள்வீதம் 16 குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டு இறுதிப் போட்டியில் பங்கேற்றன. இந்த இறுதிப்போட்டி மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது. (தொடர்ச்சி 12ஆம் பக்கம்)





சான்றிதழ் வழங்கல் நிகழ்வு





விருது வழங்கல்





சிறந்த பாடல் வரிகள் மற்றும் சிறந்த இசையமைப்புக்கான விருது வழங்கல்

### போட்டோ வீடியோக்களை பெற்றுக்கொள்ளலாம்

புனித செசிலியா விருதுக்கான மாபெரும் கரோல் பாடல் போட்டியின் இறுதிப் போட்டி மற்றும் விருது விழா போட்டோக்களை மன்னார் பிறின்ஸ் வீடியோ சென்ரரில் பெற்றுக்கொள்ளலாம். அதேபோன்று அனைத்துப் பாடல்களையும் உள்ளடக்கிய வீடியோ பிரதியை (DVD) மன்னார் கலையருவியில் பெற்றுக்கொள்ளலாம். இதன் விலை 100.00 ரூபா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள் .....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 48

## சீட்டும் கடனும் சீரழிக்கிறது!

### *‘சந்திரனும் சாத்தானும்’*

நோர்வே நாட்டின் ஸ்கவன்கர் என்ற நகரில் நான்கு ஐந்து ஆண்டுகளுக்குமுன் ஒரு விழாவின்போது புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்களால் மேடையேற்றப்பட்ட ‘சந்திரனும் சாத்தானும்’ என்ற நாடகத்தைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதில் ஒரு காட்சியில் குடும்பத்தலைவன் சமையலுக்கான சில உணவுப் பொருட்களையும் குழந்தைகளுக்கான பாலையும் வாங்கிவர ‘சுப்ப மாக்கற்’க்குச் செல்கிறார். அங்கு விலைக்கழிவில் விற்கப்பட்ட மிக அழகான மிகவும் விலை உயர்ந்த ‘ரீவி’யின்மேல் அவர் கவனம் செல்ல சமையல் பொருட்களையும் பிள்ளைகளுக்குத் தேவைப்பட்ட பாலையும் வாங்க மறந்து, அவருடைய ‘கிறடிற் காட்’டில் கிடந்த பணத்தைக் கொடுத்து மிகுதிப் பணத்தை மாத அடிப்படையில் கட்டிமுடிப்பதற்கான விண்ணப்பத்தில் கையெழுத்திட்டு ‘ரீவி’யோடு வீட்டுக்கு வரும் சம்பவத்தினை மிகவும் அற்புதமாக அந்நாடகத்தில் காட்சிப்படுத்தி இருந்தார்கள்.

மேலும், அந்நாடகத்தில் உழைத்தல், சேமித்தல், சொத்துச் சேர்த்தல் போன்றவற்றின் மட்டிலுள்ள எம்மவர்களின் மனநிலையை வெளிக்காட்டி இருந்தார்கள். “இவன்!‘பென்ஸ் கார்’ வாங்கீற்றான்!...”, “அவன் ‘டீஆர் வச்சிருக்கிறான்!...”, “உவன்! சொந்தமா தனி வீடு வாங்கீற்றான்!”, “உவனே சொந்தமா கடைபோட்டுட்டான்!” என்று அவனையும் இவனையும் அடுத்தவனையும் பார்த்து தம் மனதுக்குள் புளுங்கிக்போகிறவர்கள் இருக்கிறார்கள்.

அதேவேளை, தங்களுடைய பொருளாதார நிலமைகளைச் சரியாக இடைபோட்டுப் பார்க்காமல், மற்றவர்களைப்போல தாங்களும் வாழ நினைத்து அவற்றால் ஏற்படப்போகும் விபரீதங்களையும் பின்னடைவுகளையும் கணக்கிடாமல் - கணக்கிலெடுக்காமல் கார் வாங்கி, சொந்தமா வீடு வாங்கி, கடைபோட்டு (இவைபோல இன்னும் பல உண்டு) புலம்பெயர் நாடுகளில் அல்லோல கல்லோலப்பட்டவர்களும் வில்லங்கத்தை விலைகொடுத்து வாங்கியவர்களும் எண்ணிக்கையில் குறைவில்லாமல் இருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட புலம்பெயர் வாழ்க்கைக் கோலங்களை ‘சந்திரனும் சாத்தானும்’ என்ற அந்நாடகம் யதார்த்தபூர்வமாக வெளிக்கொணர்ந்து இருந்தது. பார்வையாளர் மத்தியில் அந்நாடகம் பெற்ற வரவேற்பும் ஏற்படுத்தியிருந்த தாக்கமும் விளைவித்திருந்த விழிப்புணர்வும் உண்மையில் மறக்கமுடியாதவை. அந்நாடகத்தின் ஊடாகச் சொல்லப்பட்ட செய்தி புலம்பெயர் மண்ணில் வாழ்ந்துவருகிற நம்மவர்களுக்கு மட்டுமல்ல ஈழத்தில் வாழ்கிற எம்மவர் ஒவ்வொருவருக்கும் மிக மிகப் பொருத்தமாகவே தெரிகிறது.

### *கஸ்ரப்பட்டுதான் முன்னேறுகிறார்கள்*

புலம்பெயர் மண்ணில் கால்பதித்த நம் **முதல் தலைமுறையினர்** கஸ்ரப்பட்டு உழைத்து நன்றாக வளர்ந்து வருகிறார்கள் என்றுதான் கூறவேண்டும். மிகக்கடினமான வேலைகளை புலம்பெயர் மண்ணில் செய்துதான் இவர்கள் முன்னேறுகிறார்கள் என்பதும் அவ்வாறான உழைப்பில் இருந்துதான் ஈழத்தில் உள்ள தம் உறவுகளுக்கும் உதவுகிறார்கள் என்பதும் ஈழத்தில் வாழும் எம்மவர்களில் அனேகர் அறியாத விடயம் என்றுதான் கூறலாம். அரச தனியார் நிறுவனங்களில் மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கடை உரிமையாளர்கள், சிறுசிறு தனியார் நிறுவன உரிமையாளர்கள் என நம்மவர்களில் ஒரு சிறு பகுதியினர் வேலைபுரிந்தாலும் அனேகமானவர்கள் உணவகங்களில் உணவை தயாரிப்பவர்களாக – பரிமாறுபவர்களாக - இன்னும் சிலர் இவ்வேலைகளுக்குப் பொறுப்பானவர்களாக இருக்கிறார்கள்.


இன்னும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலானோர், குறிப்பாகப் பெண்கள் குடும்பத் தலைவிகள், பொதுவாக அலுவலகச் சுத்திகரிப்பு - துப்பரவு வேலைகள், முதியோர் பராமரிப்பு, களஞ்சியங்கள் - தொழிச்சாலைகள் - பெரும் கடைகளில் பொருட்களை குறிப்பிட்ட இடங்களில் அடுக்குதல் - ஒழுங்குபடுத்துதல் போன்ற வேலைகளையும் இவ்விடங்களில் காசாளர், பராமரிப்பாளர், மேற்பார்வையாளர் என வேறு சில வேலைகளைச் செய்து குடும்பத்தின் சுமைகளில் கைகொடுக்கிறார்கள்.

### *இறால் போட்டுச் சுறா பிடிக்கிறார்கள்!*

சில இடங்களில் அதிகமான ஊதியத்தைக் கொடுத்து மிகவும் கடினமான வேலைகளை நம்மவர்களிடமிருந்து பெற்றுக்கொள்கிறார்கள். எப்படியென்றால், இறால் போட்டு சுறா பிடிப்பதைப் போன்றது. மலிவான இரையைத் தூண்டலில் கோர்த்துப் பொதுவாக மீன் பிடிப்பார்கள். ஆனால் பெறுமதிகூடிய இறாலை அல்லவா இரையாகப் பயன்படுத்துகிறார்கள் என்று ஆச்சரியப்பட அவர்கள் அதனைகொண்டு பெரும் பெறுமதியான மீன்களை பிடிக்கிறார்கள் என்பதைப் பொதுவாக யாரும் யோசித்துப் பார்ப்பதில்லை.

### *உறைபனியிலும் இடைவிடாத உழைப்பு*

சிலர் கடுமையான உறைபனியில் அதிகாலைப்பொழுதில் வேலைக்குச் சென்று பிற்பகலில் வீடு திரும்புகிறார்கள். சிலர் மாலையில் சென்று விடிந்ததும் வீட்டுக்கு வருகிறார்கள். இன்னும் சிலர் பொழுதுபுலர்வதும் பொழுது சாய்வதும் (படுவதும்) தெரியாமல் வேலைசெய்கிறார்கள். ஒரு வேலையிலிருந்து சிறிய இடைவேளைக்குப்பின் மீண்டும் மறுவேலைக்குச் செல்கிறவர்களும் உண்டு. அச்சிறு இடைவேளைகூட சிலவேளைகளில் இரண்டு



வேலைத்தளங்களுக்கும் இடைப்பட்ட தூரத்தில் செய்யப்படும் பிரயாணம்தான். தொடர்வண்டியில் அல்லது பஸ்சில் சிறு தூக்கம்; இதுவே அவர்களின் இடைவேளையாகிறது. அதிலும் ‘வீசா’ கிடைக்காதவர்கள் அல்லது அந்நாடுகளில் தங்கி நிற்பதற்கான தற்காலிக அனுமதியேனும் கிடைக்காதவர்களுக்கு வேலைகள் கிடைப்பதும் மிகக் குறைவு. அவ்வாறு வேலை கிடைத்தாலும் முழுமையான சம்பளம் கிடைப்பதில்லை.

ஒருவர் உழைத்து குடும்பத்திற்குப் போதாது என்பதைவிடவும்; மேலதிகமாகச் சேர்க்க முடியாது, வெவ்வேறு தேவைகளுக்காக வாங்கிய கடன்களைச் செலுத்த முடியாது, ஈழத்தில் உள்ள சொந்தபந்தங்களுக்கு உதவிகள் செய்ய முடியாது போன்ற காரணங்களால் பொதுவாகக் கணவனும் மனைவியும் பிள்ளைகளின் தேவைகளைப் பொறுத்து வேலை நேரத்தைத் தமது வசதிக்கேற்ப ஒழுங்குசெய்து வேலைக்குச் செல்வது புலம்பெயர் மண்ணில் சர்வ சாதாரணமானது. இவைபோன்ற பல சங்கதிகளும் சமாச்சாரங்களும் ஈழத்தில் வாழும் எம்மவர்களுக்கு இன்னும் முழுமையாகத் தெரியாத பக்கங்களே. எத்தனையோ கடினமான சூழ்நிலைகளிலும் இற்றைவரை இத்தனை இடர்பாடுகள் இடிபாடுகள் மத்தியில் ஈழத்தில் எம்மவர்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் அது புலம்பெயர்தோர் ஆற்றிவரும் இமயமலை போன்ற அளவிடமுடியாத உதவிகளே என்றால் அதில் மாற்றுக்கருத்திற்கு இடம் இராது.

### *சீட்டுக்களால் சீரழியும் நம்மவர்கள்*

சேமிப்பு நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு கஸ்ரப்பட்டு ஓடியோடி உழைத்த பெரும்தொகைப் பணத்தை சீட்டுக்கட்டி இழந்தவர்கள் அங்கு ஏராளம். ஏமாறுகிறவர்களின் பட்டியலும் ஏமாற்றுகிறவர்களின் பட்டியிலும் ஒன்றையொன்று மிஞ்சியதாகவே விரிந்துசெல்கிறது. இரண்டு, மூன்று சீட்டுக்களை ஓரே நேரத்தில்தொடங்கி, இரண்டு மூன்று மாதங்களில் பெற்ற பணத்தையெல்லாம் சுருட்டிக்கொண்டு வேறு நாடுகளுக்குக் குடும்பமாக ஓடிச் சென்று ‘செற்றில்’ ஆகியவர்கள் எண்ணிக்கையில் பெரிதாகய் இல்லாவிட்டாலும் இருக்கிறார்கள் என்பது உண்மை. ஐம்பது அறுபதுபேரின் வியர்வையில் மாதக்கணக்கில் உழைத்த பணத்தினையே தாங்கள் சுருட்டிக்கொண்டு ஓடுகிறார்கள் என்ற ஒரு துளி மனக்கிலேசமும் இல்லாமல் இவ்வாறு செய்துவிடுகிறார்கள். இவ்வாறு அடுத்தவரின் பணத்தில் ஏமாற்று வாழ்க்கை நடத்திக்கொண்டு “நாங்கள் நல்ல வசதிகளோட இருக்கிறம்!” என்று சொல்லித் திரிகிற பேர்வழிகளும் உண்டு.

### *நாணயத்துக்காக நாணயத்தை இழப்பவர்கள்!*

நாணயத்துக்காக (பணத்திற்காக) நாணயத்தை இழந்து வாழ்ந்துகொண்டிருக்கும் நம்மவர்கள் புலம்பெயர் மண்ணிலும் ஆங்காங்கே இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதை எண்ணுகிறபோது இப்பேர்ப்பட்டவர்கள் திருந்தவதற்கான வழி இருக்கிறதா? என்ற கேள்வியே மேலெழுந்து நிற்கிறது. இச்சீட்டுத் தொல்லையால் வாழ்க்கையைத் தொலைத்தவர்களில் நிறையப் பேர் “வெளியில் சொன்னால் வெட்கம்! நினைத்தால் மனதில் துக்கம்!” என்று வெளியே சொல்ல முடியாமலும் மனதிற்குள் வைத்து ஆற்ற முடியாமலும் பெருந்தவளையைப் பிடித்த சிறு பாம்புபோலத் தவிக்கிறார்கள்.

இவ்வாறான நிலமையிலும் சீட்டுக்கட்டுதல் முன்பைவிட இப்போது அதிகமாகவே இருக்கிறது என்கிற உறுதிசெய்யப்பட்ட அதிர்ச்சித் தகவலைக் கேட்கிறபோது தலைசுற்றுவதைத் தவிர்க்க முடியாது போகிறது! யார் என்ன செய்யமுடியும்? ஏமாளிகள் இருக்கின்றவரை ஏமாற்றுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள் என்பது நிதர்சனமான உண்மையாகிறது. இவ்விடயத்தில், சூடு வாங்கும்வரை பூனைகள் அடுப்பங்கரையை நாடத்தான் செய்யும். காரணம் சூடுவாங்கிய பூனை அடுப்பங்கரையை நாடாது என்கிறது முதுமொழி. பூனை சூடு காண அடுப்பங்கரைக்குச் செல்லலாம். ஆனால், ஒருதடவை முறையான - சரியான சூடு வாங்கினால் மறுமுறை சூடு வாங்காது தன்னை தற்காத்துக்கொள்ளும் பாடத்தை மனிதனைப் பார்க்கப் பூனை தெரிந்து வைத்திருக்கிறது.

### *கடன்பட்டவனையும் கவனமாகவே கையாள வேண்டும்!*

முன்னைய காலங்களில் கைமாற்றாகவோ அல்லது கடனாகவோ பணம் பெற்றவர்கள் குறிப்பிட்ட தவணையில் அப்பணத்தை செலுத்தத்தவறின் கடன் கொடுத்தவரின் கண்களில் படாதவாறு கவனமாகத் திரிவார்கள். கடன் கொடுத்தவன் வீடு தேடி வந்தாலும் அப்பா வீட்டில் இருக்கக்கூடியதாகவே “அப்பா வெளியில!” என்று சொல்லி மனைவியோ பிள்ளைகளோ வந்தவரை அனுப்பிவிடுவார்கள். இந்நிலையில், பெற்ற கடனை கட்டிமுடித்த பின்பே தங்களது அடுத்த கட்ட நடபடிக்கைகளைப்பற்றிச் சிந்திப்பார்கள் கடன் வாங்கியவர்கள்.

ஆனால், இப்போதெல்லாம் கடன் வாங்கியவனைக் கடன் கொடுத்தவன் காண நேர்ந்தால், கடன் கொடுத்தவன் கௌரவமாகப் பேசப் பழக வேண்டியிருக்கிறது! காரணம் வாங்கிய கடனை தராமல் விட்டுவிடுவானோ! என்ற பயம் கடன் கொடுத்தவரை இக்காலத்தில் வெகுவாகப் பாதிக்கிறது. சிலவேளைகளில், கடன் வாங்கியவன் கதைக்காமல் பார்த்துவிட்டு, ஏன் முறைத்துவிட்டுச் சென்றாலும், அந்த அசௌகரியங்களை எல்லாம் பொருட்படுத்தாமல் கடன் கொடுத்தவன் சும்மா என்றாலும், “தம்பி, எப்பிடி இருக்கிறீங்க?” என்று மரியாதையோடும் வணக்கத்தோடும் சில வார்த்தைகளில் ஏனும் அவனுடைய சுகத்தைப்பற்றி விசாரிக்கவேண்டி இருக்கிறது. காரணம், அவன் சுகமாக இருந்தால்தான் வாங்கிய காசு ஓரளவுக்கேனும் வந்துசேர வாய்ப்பிருக்கிறது என்பதை இக்காலத்தில் கடன் கொடுத்தவன் அறியாத சமாச்சாரம் அல்ல!

### *சூடு, சுரணை, மானம், றோசம் யாருக்கு வேண்டும்!*

இவ்வாறுதான் ஒருதடவை கடன் வாங்கியவன் கடன் கொடுத்தவனை மிகக் கடுமையான - மோசமான வார்த்தைகளில் திட்டித்தள்ளினான். பொதுவாக, ஒரு தீய - ஏற்றுக்கொள்ள முடியாத செயலை ஒருவன் செய்துவிட்டால், “உனக்கு! சூடு, சுரணை, மானம், வெக்கம், றோசம் இருந்தா; இப்பிடிச் செய்வியா?” என்றுதானே கோபத்தில் பேசக் கேட்டிருப்போம். ஆனால், கடன் வாங்கிய நம்மவன் ஒருவன் இதே ‘டயலெக்கையே’ (உரையாடலையே) கொஞ்சம் தனக்கு ஏற்றால்போல மாற்றி, “உனக்கு! சூடு, சுரணை, மானம், வெக்கம், றோசம் இருந்த, கு(கொ)டுத்த கடனை திருப்பிக் கேட்காதடா?” என்றானாம். எப்படி இருக்கிறது இந்த ‘டயலொக்?’ இப்படிச் சொல்லுகிறவனிடமிருந்து எப்படித்தான் பணம் கொடுத்தவன் பெற்றுக்கொள்வானோ! சுருங்கச் சொன்னால், அதனை அவனைத் தவிர ஆ(யா)ரும் அறியான்! கடன் கொடுத்துவிட்டு வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு திரியவேண்டிய நிலைதான்!

மேற்கூறப்பட்டவர்களில் கடன் வாங்குகிறவர்களிலும் கடன் கொடுப்பவர்களிலும் ஒரு வகையினரே. அதில், கடன் வாங்குகிறவன் வில்லனாகவும் கடன் கொடுக்கிறவன் அப்பாவியாகவும் ஆங்காங்கே ஒருசிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். இல்லையென்றால் எப்படி மேற்சொன்ன ‘டயலொக்” போன்றவை உருவாக வாய்ப்பிருக்கிறது? அந்தவகையில் கைமாற்றாக - கடன்கொடுத்து (வட்டிக்கல்ல) உதவிசெய்ய நல்ல மனம் படைத்தவர்கள் கடன் வாங்கியவர்களின் கடும் போக்குகளால் - ஏமாற்றுத்தனங்களால் கடன் கொடுத்து உதவிசெய்வதைக் கைவிட்டுவிடுகிறார்கள். இதனால் தராள உள்ளம் கொண்ட உதவிசெய்யும் மனப்பான்மை கொண்டவர்கள்கூட, “பிச்சைவேண்டாம் தாயே நாயை பிடி!” என்ற நிலைக்கு வந்துவிடுகிறார்கள்.

### *கடன் வாங்கிக் கடன் கொடுப்பது!*

இன்னொரு பக்கத்தில், கடன் வாங்கிக் கடன் கொடுப்பவர்கள் என்ற ஒரு வகையினர் இப்போது (முன்பும்தான்) பிரபலமாகச் சில இடங்களில் பேசப்படுகிறார்கள். எல்லோருக்கும் விளங்கக்கூடிய பாணியில் சொல்வதானால், ‘இரண்டு சத வட்டிக்கு கடன் வாங்கி, ஏழு சத வட்டிக்குக் கடன் கொடுப்பது!’ கடன் கொடுப்பவர்களில்கூட சர்வாதிகாரப்போக்குடைய ஒருவரால் மட்டும்தான் இதனைச் செய்யமுடியும். இப்படிப்பட்டவர்களுக்கு மனச்சாட்சி என்று ஒன்று இருக்கக்கூடிய வாய்ப்புக் குறைவு. அப்படி இருந்திருந்தாலும் அதனை ஏற்கனவே கறையான் அரித்திருக்கக்கூடிய வாய்ப்புக்களே அதிகமாயிருக்கும். இப்பேற்பட்டவர்களிடம் கடன் பெறுகிறவர்கள் வட்டிக்குக் கடன் வாங்கி வட்டியைக் கட்டுகிற ஏழைகளாக – பரம ஏழைகளாக இருப்பார்கள்.

### *கைமாற்றாகக் கொடுத்த கவலையோ!*

கைமாற்றாகவோ அல்லது அவசிய – ஆபத்து நேரத்தில் உதவும் பொருட்டு கடன் வாங்கிக் கடன் கொடுத்த கவலையில் எழுதுகிறாரோ என்றுகூட சிலர் சிந்திக்கலாம். சிலர் தங்கள் சுய அனுபவங்களில் இருந்து பேசுவார்கள். இன்னும் சிலர் தங்கள் சொந்த அனுபவங்களில் இருந்து பேசுவார்கள். மேலும் சிலர் தங்கள் சோக அனுபவங்களில் இருந்தும் பேசுவார்கள். எது எவ்வாறு இருந்தாலும் “கடன் கேளாதீர்! கடன் உறவுக்குப் பகை” எனச் சின்ன வயதில் சிறுசிறு பலசரக்கு, தேனீர் கடைகளில் அடிக்கடி படித்த ஞாபகம் உண்டு. அது சரிபோலத்தான்படுகிறது.

(கருத்துக்களுக்கும் விமர்சனங்களுக்கும்)

anpuomi1970@gmail.com


## மன்னா
## சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளோம் என்பதையும் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை அழைத்தலும் பெற்றோர்களின் பங்களிப்பும்

- அருட்பணியாளர் மா. றேஜிஸ் இராசநாயகம் -

**குடும்பம்தான் முதல் குருமடம் :**

வாழ்வைப்பற்றிய, குழந்தையின் முழு மனநிலையும் அந்தக் குழந்தையின் குடும்பத்தில்தான் உருவாகின்றது. படிக்கும் பள்ளியும், வாழும் சமுதாயமும், இந்த மன வளர்ச்சியில் பற்கேற்குமுன், அந்தக்குழந்தை வாழும் இல்லம்தான் முதன்முதலில் அந்தக் குழந்தையின் வாழ்வில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. குடும்பம்தான் முதல் குருமடம். அங்கு போடப்படும் அடித்தளம்தான் பிள்ளையின் மரணம்வரை நீடிக்கின்றது, நிலைத்து நிற்கின்றது.

**முன்மாதிரிகை காந்தம்போல :**

இல்லத்தில் வாழும் பெற்றோர்கள், நல்ல ஒழுக்கமான கட்டுப்பாடான, தெய்வப் பக்தியுள்ளவர்களாயிருந்தால் வாழ்க்கை இலட்சியங்களை பிள்ளைகளின் உள்ளங்களில் உருவாக்குவார்கள். பெற்றோர்கள் மற்றவர்களின் நற்குணங்களைப் பாராட்டி, மதித்து, உதவிசெய்து வாழ்பவர்களாக இருந்தால், பிள்ளைகளும் நல்ல சமூக, சமுதாய நெறிமுறைகளைப் பின்பற்ற முயலுவர். இதேபோலதான் மதம் சார்ந்த வாழ்விலும், பெற்றோர்களின் ஆழ்ந்த விசுவாசம், பக்தி, இறை அச்சம் இவைகள் பிள்ளைகளின் ஆன்மீக வாழ்விலும், பெரிய மாற்றங்களை, வாழ்க்கைப் பிடிப்புகளை, மதிப்பீடுகளை ஏற்படுத்துகின்றன.

**குடும்பமே இறை அழைத்தலின் நாற்றுமேடை:**

இறையழைத்தல் என்பது வீட்டிலுள்ள பெற்றோர்கள் வாழும் வாழ்க்கை முறை, சேவை நலன்கள், அன்புப் பிணைப்புகள், போன்றவற்றின் வழியில்தான் வளர்கின்றன. எனவே, அன்பிற்கும் சேவைக்கும் என்று பிறக்கின்ற எந்த இறையழைத்தலும், குடும்பத்திலுள்ள தாராள மனம், சேவை மனப்பான்மை, தன்னலமற்ற தன்மை இவைகளையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

**கருவறை தொடங்கி கல்லறை வரை:**

இத்தகைய வளர்ச்சி ஒரு வாழ்க்கை முறையைத் தேர்ந்துகொண்ட பிறகு முடிவடைவதில்லை. மாறாக அந்த நபரின் இறுதிக்காலம்வரை இத்தகைய வளர்ச்சி தொடர்கிறது. மனிதன் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் வளர்ந்துகொண்டே இருக்கின்றான். எனவே, உங்கள் பிள்ளைகள் சிறிய குருமடம் சேர்ந்தபின்பு மாத்திரமல்ல பெரிய குருமடத்திலிருக்கும்போதும், ஏன் குருக்களாக வந்தபின்பும் உங்கள் பிள்ளைகள்தான். மற்றவர் நடுத்தெருவில் அவர்களை விமர்சிக்குமுன் அவர்களுக்கு நீங்கள் சொல்லவேண்டியவற்றைச் சொல்வது உங்கள் பாரிய பொறுப்பு.

**நல்ல நிலமா?**

நல்ல விளைச்சலை நாம் பெறவேண்டும் என்றால் முதலில் நிலத்தை நன்றாகப் பண்படுத்த வேண்டும். அப்படிப் பண்படுத்தும்போது நாம் மிகச்சிறந்த விளைச்சலைப் பெறமுடியும். இதையே வள்ளுவரும்,

நிலத்தில் நடந்ததை கால்காட்டும்
கால்காட்டும் நல்குலத்தில் பிறந்தாரை வாய்ச்சொல் (குறள் 959) என்றார். நிலத்தின் தன்மையை அதிலிருந்து கிளம்பும் முளை காட்டும். பிறந்த குலத்தின் அதாவது குடும்பத்தின் தன்மையை ஒருவன் வாயிலிருந்து வரும் சொல் காட்டிவிடும் என்கிறார்.

**திருத்தந்தையின் உரையிலிருந்து:**

2015 செப்ரெம்பர் 13-19 வரை உரோமையில் 5,000 இளம் துறவிகளுக்கான ஒன்றுகூடலின்போது செப்ரெம்பர் 17 அன்று ஆரம்ப உரையில் திருத்தந்தை பிரான்சிஸ் கூறியதிலிருந்து இரு கருத்துக்கள்:

1. துறவிகள் "சொகுசு" வாழ்வை விட்டு சவால்களுக்கு முகங்கொடுத்து வாழப் பழகவேண்டும்.
2. அழைத்தலில் இறைவனின் குரலை இனங்காண்பது மிகக்கடினம். துல்லியமான அக்குரலை மிக அவதானத்துடன் இனங்காணவேண்டும்.

திருத்தந்தை இந்த இரண்டாவது குறிப்பைக் கூறும்போது தன் சொந்த அழைத்தலை மேற்கோள்காட்டியே கூறினார்.

ஏன் இவ்வாறு கூறினார் என்றால் இன்று வாழ்விலே பல குரல்கள் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. அமைதியில் ஆண்டவரோடு (தி.பா. 46:10) நாம் இருக்கப் பழகவில்லையென்றால் இறைவனின் குரலை இனங்காண்பது முயற்கொம்பு.

விவிலியத்தில் 1 சாமுவேல் 3:4-10ல் சாமுவேலை ஆண்டவர் மூன்றுமுறை அழைத்தார். முதல் இரண்டு தடவையும் ஏலியால் இனங்காணமுடியவில்லை. ஏன்...? இன்னுமோர் உண்மையை 3:17ல் பார்க்கின்றோம். (ஆண்டவர் உன்னிடம் சொன்னதை என்னிடம் மறைக்காதே என்று ஏலி கூறினார்)

**அன்பான வார்த்தை ஆணிவேர்போன்று ஆழமாக ஊடுருவும்:**

பெற்றோர்கள் இந்நிலையில் தங்கள் அறிவுரைகளை, அன்பு வேண்டுதல்களைக் கொடுக்கலாமே தவிர, அவர்களைக் கட்டாயப்படுத்தி ஒரு நிலைக்கு உட்படுத்துவது கூடாது.

**உருவாக்கம் 24 மணிநேரப் பணி:**

"மாடு மேய்க்காமல் கெட்டது, பயிர் பார்க்காமல் கெட்டது, பிள்ளை வளர்க்காமல் கெட்டது" என்பார்கள்.

பல்கலைக்கழக நல்லாயன் நிலையத்தில் நான் இருக்கும்போது ஒருவர் குடிபோதையில், "என்னை மேய்த்தவர் சரியாய் மேய்த்திருந்தால், நான் ஏன் இப்படி இருக்கின்றேன்" என்று உளறுவார். உளறலிலும் உண்மையுண்டு. உண்மைகள் உறங்குவதில்லை, ஊமைகளாவதில்லை.



எனவே, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் சிறுவர், இளம் பருவங்களில் அவர்களைப் பக்குவமாகக் கவனித்து, அவர்களது நடையுடை பாவனைகளை ஆராய்ந்து, அவர்களுக்கு நல்ல ஆசிரியர்களாக, உதவுபவர்களாக, வழிகாட்டிகளாகச் செயல்பட முயல வேண்டும். இதுவே பெற்றோரின் கடமையுமாகும்.

**என் அம்மாவின் தியாகமும் விசுவாசமும் அலாதியானது:**

துறவிகள் தங்களது 'துறவற வாழ்வு' என்ற கனவை நனவாக்கப் பெற்றோர்கள் எடுத்த முயற்சிகள் ஆயிரமாயிரம் என்று பெருமையோடு கூறுவார்கள். உ+ம். நான் சிறிய குருமடம் சேர்ந்த 1959ஆம் ஆண்டு தொடக்கம் தான் இறக்கும்வரை ஒவ்வொரு சனிக்கிழமையும் எனக்காக எனது அம்மா உபவாசமிருந்தார். அதேபோலவே என்னுடைய கடைசித் தங்கைக்காக ஒவ்வொரு புதன்கிழமையும் உபவாசம் இருந்தார். அதுமாத்திரமல்ல நான் குருவாக வந்தபின் விடுமுறைக்காக வீட்டுக்குச் சென்றபோதெல்லாம் அம்மா என்னிடமே வந்து "சுவாமி பாவியாயிருக்கிற என்னை ஆசீர்வதியும்" என்று முழந்தாளிலிருந்து தனது பாவசங்கீர்த்தனத்தைச் செய்தார். அம்மாவின் இந்த ஆழமான விசுவாசமும் தியாகமுமே எம் இருவரையும் வாழ்வில் இறைவனுக்கு உகந்தவர்களாய் இருக்கச்செய்கின்றது.

**ஈன்றபொழுது பெரிதுவக்கும் தன் மகனை...**

தமிழ் இலக்கியத்தில் "தன் மகனைச் சான்றோன்' என்று கேட்ட தாய்" என்ற புகழுரையும் உண்டு. இன்று கத்தோலிக்க மக்கள் 'என் மகனைக் குருவென்று அழைத்தேன்' என்பதில் பெருமை கொள்ளவேண்டும். ஆம், நம் மத்தியிலும், இன்று இறை அழைத்தல் பெருகி வருகிறது என்றால் அதற்கு முக்கிய காரணம், இன்னும் நம் மத்தியில் நல்ல குருக்கள், கன்னியர்கள், சகோதரர்கள் வாழையடி வாழையாக வந்து கொண்டிருக்கின்றார்கள். குடும்பம் இல்லையேல், தேவ அழைத்தலே இல்லை எனலாம்.

**எந்த மோதிரம் மகத்துவமானது?**

பத்தாம் பத்திநாதர் திருத்தந்தை ஆவதற்கு முன், ஆயர் சார்த்தோ என்றழைக்கப்பட்டார். அவர் ஆயராகிய பிறகு, தனது விரலில் அணிந்திருந்த திருமோதிரத்தைத் தன் தாயிடம் மகிழ்ச்சிப் பேருவகையோடு காட்டினாராம். அதைப் பார்த்த தாய், அவரைப் பார்த்துக் கூறினாள், "என் கையிலிருக்கிற இந்த மோதிரத்தை நான் அணிந்திருக்கவில்லையென்றால், நீ அந்த மோதிரத்தை அணிந்திருக்க முடியாது." தன் மகன் குருவாக வேண்டுமென்ற ஆசை, தன் உள்ளத்தின் ஆழத்தில் ஆரம்பத்திலே புதைந்து கிடந்தது என்ற இரகசியத்தை வெளியிட்டாள்.

**தூய துகில்:**

பிரான்ஸ் நாட்டிலுள்ள மணமாகிய ஒரு மங்கை, தான் திருமண நாளில் அணிந்திருந்த தூய துகிலைப் பத்திரமாகத் தன் சிறிய பெட்டிக்குள் பூட்டி வைத்திருந்தாள். தன் மகன் திருப்பொழிவு செய்யப்பட்டபோது அவரது கரங்களை இத்தூய துகிலால் கட்டி, ஆனந்தக் கண்ணீர் சிந்தினாளாம். அது அன்றைய குருப்பட்ட நாள். இன்று...? அழைப்பிதழ் அடிப்பது, கொடுப்பது, வீடியோ பிடிப்பது இவைதான் முக்கியம். இவற்றைப்பார்த்து முடிந்ததும் குருத்துவம் கசக்கின்றது. எனவே,

**குடும்பத்தில் தேவ அழைத்தலை வளர்க்கக் கீழ்க்கண்ட வழிகளைப் பெற்றோர்கள் பின்பற்றலாம்:**

**1. செபம் : விப. 17:12**

மோசேயின் கரங்கள் ஆண்டவரை நோக்கி செபத்தில் உயர்ந்திருந்தபோது இஸ்ராயேலர் வெற்றிபெற்றனர். தளர்ந்தபோது தோல்வி கண்டனர்.

பெற்றோரின் கரங்கள் மோசேயின் கரங்கள்போன்று இறைவனை நோக்கி உயர்த்தப்பட்டிருக்கும்போதெல்லாம் மகனின் அழைத்தல் வாழ்வில் வெற்றிக்குமேல் வெற்றி. கரங்கள் தளரும்போது.......

**2. தவம் அல்லது உபவாசம் -**

செபமும் தவமும் ஆன்மீகத்தின் இரு கண்கள்.

**3. நற்கருணைப் பக்தி**

**4. அன்னை மரியாளின் பக்தி**

அன்னை மரியாள்தான் நம் நித்திய குருவாகிய கிறிஸ்துவின் தாய். எனவே, குடும்பங்களில் இறையழைத்தலை வளர்க்கவேண்டும் என்று விழையும் பெற்றோர்கள் தினமும் இரவு நித்திரைக்குச் செல்லுமுன் அன்னை மரியாளுக்கு மிகப்பிரியமான செபமாலை சொல்லி அழைத்தலுக்காகச் செபித்தல் வேண்டும். தாய்ப்பாசமுள்ள பிள்ளை தவறினாலும் அழிந்துபோகாது.

**5. குருக்கள், கன்னியர்கள், சகோதரர்கள்மேல் அன்பு மரியாதை:** →

## நாட்டு நடப்புக்கள்

### வடக்கில் 5 ஆண்டுகளில் புதிதாக 18 விகாரைகள்

போருக்குப் பின்னரான கடந்த 5 ஆண்டுகளில் வடக்கு மாகாணத்தில் புதிதாக 18 விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

2009ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்தில் 29 விகாரைகள் அமைக்கப்பட்டிருந்த நிலையில், 2014ஆம் ஆண்டு அந்த எண்ணிக்கை 47 ஆக அதிகரித்துக் காணப்படுகின்றன.

### உலகில் நீரினால் ஏற்படும் நோய்களால் 20 செக்கன்களுக்கு ஒரு குழந்தை இறப்பு

உலகில் நீரினால் ஏற்படும் நோய் காரணமாக 20 செக்கன்களுக்கு ஒரு குழந்தை இறப்பதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் வைத்தியர் வைதேகி ஆர். பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

## உலக நடப்புக்கள்

### உலகில் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் மதக்குழுவினராக முஸ்லிம்கள் உள்ளனர்

உலகில் மிகவும் வேகமாக வளர்ச்சியடைந்து வரும் மதக் குழுவினராக முஸ்லிம்கள் உள்ளதாகவும் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் முஸ்லிம்களின் தொகை கிறிஸ்தவர்களின் தொகையை விஞ்சிவிடும் எனவும் புதிய ஆய்வொன்று கூறுகிறது.

அமெரிக்க வாஷிங்டன் நகரை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் பக்கச்சார்பற்ற புத்திஜீவிகள் அமைப்பான பி! ஆராய்ச்சி நிலையத்தால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அமெரிக்க சனத்தொகையில் முஸ்லிம்களின் தொகை வருடாந்தம் அதிகரித்து வருவதாக அந்த நிலையம் கூறுகிறது.

2002ஆம் ஆண்டில் அமெரிக்க சனத்தொகையில் முஸ்லிம்களின் தொகை 5 சதவீதமாக இருந்தது 2012ஆம் ஆண்டில் அந்தத் தொகை 10 சதவீதமாக உயர்ந்துள்ளது.

இதன் பிரகாரம் அமெரிக்காவுக்கு வருடாந்தம் 100,000 பேர் வரை வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட எதிர்பார்த்துள்ள வேட்பாளர் டொனால்ட் டிரம்ப், அமெரிக்காவுக்குள் முஸ்லிம்கள் பிரவேசிப்பது முழுமையாகத் தடைசெய்யப்பட வேண்டும் என அழைப்பு விடுத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே மேற்படி ஆய்வின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கடந்த வருடத்தில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான குடியேற்றவாசிகள் ஐரோப்பாவை வந்தடைந்துள்ளனர்



ஐரோப்பாவை தரை மற்றும் கடல் வழியாக இந்த வருடம் வந்தடைந்த குடியேற்றவாசிகளின் தொகை ஒரு மில்லியனையும் தாண்டியுள்ளதாக புலம்பெயர்தல் தொடர்பான சர்வதேச அமைப்பு தெரிவிக்கிறது.

இது கடந்த வருடத்திலான தொகையை விடவும் 4 மடங்கு அதிகமாகும். மேற்படி புலம்பெயர்ந்தவர்களில் பெரும்பான்மையானோர் கடல் மார்க்கமாகவே புலம்பெயர்ந்துள்ளனர். இதன் பிரகாரம் துருக்கியிலிருந்து கிரேக்கத்துக்கு 800,000 பேருக்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

அவர்களில் பலர் சிரியா, ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர். அதேசமயம் இந்த காலப் பகுதியில் 3,695 குடியேற்றவாசிகள் கடலில் மூழ்கி பலியாகியோ அன்றி காணாமல் போயோ உள்ளதாக புலம்பெயர்தல் தொடர்பான சர்வதேச அமைப்பு தெரிவிக்கிறது.

**நிறைவாக**

வெகு சீக்கிரத்தில் முடிந்துவிடும் இந்த மேலான உபத்திரவம்: (ஆ+கா) டாக்டர் மகோணி சொல்லியிருக்கிறார்: "உலகிலுள்ள பல அலுவல்கள், வாழ்க்கை நிலைகளைப்பற்றிக் கண்ணும் கருத்துமாய் விளக்கிக்கூறும் பெற்றோர்கள், உலகிலே அளவில்லாத பாக்கியம் நிறைந்த துறவற நிலையைப் பற்றியும், தங்கள் பிள்ளைகளுக்கு விளக்கிக் கூறட்டும். அப்போதுதான், பிள்ளைகள் வளரும்போது தங்களது விருப்பங்கள், திறமைகள், மனநிலைகள் இவைகளுக்கு ஏற்ப தங்களது வாழ்க்கை நிலைகளைத் தேர்ந்தெடுப்பர்."

பெற்றோர் தமது விசுவாச வாழ்வினூடாக தம் பிள்ளைகளுக்கு சிறு பராயத்திலிருந்தே விசுவாசத்தைக் கற்றுக்கொடுத்து அவர்களின் அழைத்தல் வாழ்விற்கு வித்திடுகின்றனர்.

பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம். ஆனால், இறப்பு ஒரு சரித்திரமாக அமையவேண்டும் என்றார் அப்துல் கலாம். ஆம் வாழ்வது ஒருமுறை! வாழ்த்தட்டும் தலைமுறை!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## தைப்பாவையே வருக!

- வாகரை வாணன்



1. தையே நீ வருக தமிழணங்கே வருக
மெய்யெல்லாம் அழகு மின்ன நீ வருக
மைமேகக் கூந்தல் மண்தடவ வருக
பைய நீ வருக பாதமது சிவக்கும்.

2. நாற்குணமும் விளங்க நங்கை நீ வருக
தேர்போல அசைந்து தேவதை நீ வருக
ஆர்க்கும் பொன் சிலம்பு அணிந்து நீ வருக
பார்க்கும் கண்எலாம் படமுனைப் பிடிக்கும்

3. வாழை, குலையோடு வரவேற்கும் உன்னை
பாளையுடன் தென்னை பரவசத்தில் மூழ்கும்
தாழை மலர் வாசம் தழுவி வரும் காற்று
சூழலெலாம் இனிக்கும் சுந்தரி நீ வருக.

4. தென்றல் நீ வருக திங்கள் நீ வருக
மனறலது கமழ மங்கை நீ வருக
குன்றமது தானும் கோதை உனைக்கண்டு
நின்றபடி உருகும் நேரிழையே வருக

5. பொங்கலது பொங்கி புதுப்பானை வைத்து
மங்கலங்கள் பழங்கள் மலரெல்லாம் படைத்து
சங்கை நாம் செய்தோம் தமிழே நீ வருக
எங்கும் உன் சிறப்பு இனியவளே வருக.

6. நின்வழியில் நிற்கும் நிழல் மரங்கள் எல்லாம்
பொன் மலர்கள் தூவும் பூங்காற்று தழுவும்
பண்பாடிப் புட்கள் பாவை உனைவாழ்த்தும்
மண் எல்லாம் இந்த மணிவிழா நடக்கும்.

7. உன்வரவு பார்த்து ஊரெல்லாம் திரளும்
பெண் வரவு அன்றோ பிறகென்ன சொல்ல?
கண்ணெல்லாம் உன்னில் கருவண்டாய் மொய்க்கும்
மண்ணாளும் எங்கள் மகாராணி வருக.

8. தைப்பாவை வந்தாள் தமிழர் தம் எண்ணம்
கை கூடும் என்பார் காத்து நாம் நின்றோம்
மை கூடும் வானின் மஞ்சள் நிலாபோல
செய்யவளே வருக செகமெல்லாம் வணங்கும்.





## புனித செசிலியா விருது

9ஆம் பக்கத் தொடர்ச்சி

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற குழுக்களுக்கு புனித செசிலியா விருது வழங்கப்பட்டது. இறுதிப் போட்டியில் பங்கெடுத்த அனைத்துக் குழு உறுப்பினர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இவ்வாண்டுப் போட்டியில் தமிழ் பாடல்கள் புதிய படைப்பாக அமையவேண்டும் என்ற வேண்டுகோளுக்கு இணங்க சிறந்த பாடல் வரிகளுக்கான மற்றும் சிறந்த இசையமைப்புக்கான விருதுகளும் வழங்கப்பட்டன. இதனடிப்படையில் கீழ்ப்பிரிவு தமிழ் பாடல்போட்டியில் சிறந்த பாடல் வரிகளுக்கான மற்றும் சிறந்த இசையமைப்புக்கான விருதுகளை பேசாலைப் பங்கைச் சேர்ந்த திரு. றொணில்ரன் பச்சேக் அவர்கள் பெற்றுக்கொண்டார். மேற்பிரிவு தமிழ் பாடல் போட்டியில் சிறந்த பாடல் வரிகளுக்கான மற்றும் சிறந்த இசையமைப்புக்கான விருதுகளை அருட்பணியாளர் ஏ. றஜினிகாந்த் பெற்றுக்கொண்டார்.

இப்போட்டி நிகழ்வுகளின் இணைப்பாளராக மன்னார் வலயக் கல்வி வலயத்தின் தமிழ்த்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்கள் பணியாற்றி சிறப்பான பங்களிப்பை வழங்கியிருந்தார். கலையருவி மற்றும் மன்னா பத்திரிகை அலுவலகப் பணியாளர்கள் செல்வி. எஸ். துலக்ஷினி, செல்வி. அ. சாமிலா, திருமதி. சிறோமி, திரு. ஜே. யூட் ஆகியோர் இந்நிகழ்வுகள் சிறப்பாக அமையப் பங்காற்றியிருந்தனர்.

இந்நிகழ்வின்போது மன்னார் பரதக்கலாலயா நாட்டியப் பள்ளி மாணவ மாணவிகள் சிறப்பு நடன நிகழ்வுகளை வழங்கினர். இந்நடனங்களை நடன ஆசிரியர் திருமதி வதனி தயாபரன் நெறியாழ்கை செய்திருந்தார்.

இந்நிகழ்வின்போது கலையருவியினால் நடாத்தப்பட்ட "அர்ப்பண வாழ்வும் குடும்பமும்" என்ற கருப்பொருளைக் கொண்ட புத்தாக்கப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. நாடகப் போட்டியில் முதலிடம் பெற்ற தலைமன்னார் பங்கு நாடகம் இந்நிகழ்வின்போது மேடையேற்றப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் வருடாந்தம் நடைபெறும் பிரமாண்டமான கரோல் பாடல் போட்டியாக இப்போட்டி அமைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## சித்த மருத்துவக் குறிப்புகள்



- *நெஞ்சுச் சளி* : தேங்காய் எண்ணெயில் கற்பூரம் சேர்த்து நன்கு சுடவைத்து ஆறவைத்து நெஞ்சில் தடவினால் சளி குணமாகும்.
- ***தலைவலி*** : ஐந்தாறு துளசி இலைகளோடு ஒரு சிறு துண்டு சுக்கு, 2 லவங்கம், சேர்த்து நன்கு அரைத்து நெற்றியில் பற்றாகப் போட்டால் தலைவலி குணமாகும்.
- ***தொடர் விக்கல்*** : நெல்லிக்காய் இடித்துச் சாறு பிழிந்து, தேன் சேர்த்துச் சாப்பிட்டால் தொடர் விக்கல் தீரும்.
- ***உதட்டு வெடிப்பு*** : கரும்புச் சக்கையை எடுத்து எரித்து சாம்பலாக்கி, அதனுடன் வெண்ணெய் கலந்து உதட்டில் தடவி வந்தால் உதட்டு வெடிப்பு குணமாகும்.
- ***குடல் புண்*** : மஞ்சளை தணலில் இட்டு, சாம்பல் ஆகும் வரை எரிக்க வேண்டும். மஞ்சள் கரி சாம்பலை தேன் கலந்து சாப்பிட்டால் குடல் புண் ஆறும்.
- ***வாயுத் தொல்லை*** : வேப்பம் பூவை உலர்த்தி தூளாக வெந்நீரில் உட்கொள்வதினால் வாயுத்தொல்லை நீங்கும். அத்துடன் ஆறாத வயிற்றுப்புண்ணும் நீங்கும்.
- ***வயிற்று வலி*** : வெந்தயத்தை நெய்யில் வறுத்து பொடி செய்து மோரில் குடித்தால் வயிற்று வலி நீங்கும்.
- ***மலச்சிக்கல்*** : செம்பருத்தி இலைகளை பொடியாக்கி, தினமும் இருவேளை சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் தீரும்.
- *பித்த வெடிப்பு* : கண்டங்கத்திரி இலைசாறை ஆலிவ் எண்ணையில் காய்ச்சி பூசிவந்தால் பித்த வெடிப்பு குணமாகும்.
- ***தேமல்*** : வெள்ளை பூண்டை வெற்றிலை சேர்த்து மசிய அரைத்து தினமும் தோலில் தேய்த்து குளித்து வந்தால் தேமல் குணமாகும்.
- ***தீப்புண்*** : வாழைத் தண்டை சுட்டு அதன் சாம்பலை தேங்காய் எண்ணையில் கலந்து தடவி வந்தால் தீப்புண், சீழ்வடிதல் மற்றும் காயங்கள் விரைவில் குணமாகும்.
- ***மூக்கடைப்பு*** : ஒரு துண்டு சுக்கை தோல் நீக்கி அரை லிட்டர் நீரில் போட்டு சுண்டக் காய்ச்சி, பால், சர்க்கரை சேர்த்துக் காலை, மாலை சாப்பிட்டு வந்தால் மூக்கடைப்பு விரைவில் நீங்கும்.
- ***வறட்டு இருமல்*** : எலுமிச்சம்பழச்சாறு, தேனில் கலந்து குடித்தால் வறட்டு இருமல் குணமாகும்.
- ***ஜலதோஷம்*** : ஜலதோஷம் காய்ச்சல், தலைவலிக்கு பனங்கிழங்கை அவித்து காயவைத்து இடித்து பொடியாக்கி பனங்கல் கண்டு சேர்த்து சாப்பிட்டால் குணமாகும்.
- ***பிரயாணத்தின்போது வாந்தி நிறுத்த*** : தினசரி ஒரு நெல்லிக்காய் என தொடர்ந்து 41 நாட்கள் சாப்பிட வாந்தி வராது.
- ***தலைப்பாரம், நீரேற்றம் நீங்க*** : இஞ்சியை இடித்துச் சாறு எடுத்து சூடாக்கி தலையில் நெற்றியில் பற்று போட குணமாகும்.

## கொஞ்சம் சிரிங்க

***மோகன்*** : டேய்! வாடா, எக்ஸாம் ரிசல்ட் வந்திருக்கு, பாத்துட்டு வரலாம்.
***குகன்*** : வேணாம் அப்பாகூட இருக்காரு. நீ பாத்துட்டு வந்து சொல்லு. ஒரு பாடத்தில பெயில்னா எனக்கு குட்மோனிங் சொல்லு.
***மோகன்*** : இரண்டு பாடத்தில பெயில்னா??
***குகன்*** : எங்க அப்பாவுக்கு குட்மோர்னிங் சொல்லு. நான் புரிஞ்சுகிறேன்.
***மோகன்*** : சரிடா.
***குகன்*** : கலோ... சொல்லுடா
***மோகன்*** : உன்னோட குடும்பத்திற்கே குட்மோர்னிங்டா!!!

## சமையல் குறிப்பு

### கூழ் கொழுக்கட்டை

**தேவையானவை:**

பச்சரிசி மா – 2 கப், தேங்காய்த் துருவல், கடுகு, உளுந்தம் பருப்பு – 1 கரண்டி, எண்ணெய் - 2 கரண்டி, உப்பு சிறிது.

**செய்முறை :**

தாச்சிச் சட்டியில் எண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம் பருப்பு போட்டு தாளித்து 6 கப் தண்ணீர ஊற்றிக் கொதிக்கவிடவும். பிறகு அரிசிமாவைக் கொட்டிக் கிளறிக்கொண்டே இறக்கவும். பின்பு கிளறிய மாவை தட்டில் கொட்டி, அழுந்தப் பிசைந்து, சிறுசிறு உருண்டைகளாக உருட்டவும். அடிப்பகுதி கனமான பாத்திரத்தில் 4 கப் தண்ணீர் விட்டு அதில் கொழுக்கட்டைகளை போட்டு வேகவைத்து இறக்கும்போது தேங்காய்த்துருவலை சேர்க்கவும். கூழ் கொழுக்கட்டை தயார்!

## மன்னா விளம்பரப் பலகை

கடவுளுக்கு பிரார்த்தனை செய்யும் உதடுகளைவிட
மக்களுக்கு உதவி செய்யம் கைகளே மேலானவை.

நாம் நினைக்கும் ஒவ்வொரு எண்ணமும் நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் குறிப்பிட்ட காலத்திற்குப்பின் சூட்சமாக நம்மிடமே திரும்புகின்றன.

..............................

பிறக்கும்போது தாயை அழவைக்கின்றோம். இறக்கும்போது உறவுகளை அழவைக்கின்றோம். வாழும்போதாவது மற்றவர்களைச் சிரிக்கவைத்து வாழ்வோம்.

*- கி. றம்யா கூஞ்ஞ, தலைமன்னார் கிராமம் -*

நல்லவனா நடிப்பதைவிட வாழ்ந்துவிடலாம்.

..............................

வாழ்க்கையில் யாரையும் சார்ந்து வாழ்ந்துவிடாதீர்கள்...! ஏனெனில் உங்கள் நிழல்கூட வெளிச்சம் உள்ளவரைதான் துணைக்குவரும்...!

..............................

ஒருபோதும் விழமாட்டேன் என்று நினைப்பவனைவிட, விழுந்தாலும் எழுந்து ஓடலாம் என்று நினைப்பவனே வெற்றி பெறுகிறான். - *யோ. மிரியம் டர்ஷிக்கா -*

நீ எதைச் செய்தாலும் உன் உள்ளத்திற்கும்
உலகத்திற்கும் உண்மையாகவே நடந்துகொள்.

..............................

அன்னையை இழக்கும் வாழ்க்கை உப்பற்ற சோற்றிற்கு ஒப்பாகும்.

*- யோ. ஜெறி டியூலன், நானாட்டான் -*

வாழ்வில் உண்மையான மகிழ்ச்சி பிறரை அன்பு செய்வதிலே அடங்கியுள்ளது. பிறரிடமிருந்து நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்களோ அதையே அவர்களுக்கு கொடுங்கள். வாழ்வில் உண்மையான மகிழ்ச்சியை அனுபவிப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலகத் திருச்சபைச் செய்திகள்**

# உலகளாவிய ரீதியில் சமாதானமும், நல்லிணக்கமும் நிலைநாட்டப்படவேண்டும்

## நத்தார் தினச் செய்தியில் திருத்தந்தை அழைப்பு


பாப்பரசர் பிரான்சிஸ் அவர்கள் 'ஊர்பி எற் ஓர்பி' (Urbi et Orbi) என்று அழைக்கப்படுகின்ற பரந்த விடயங்களை உள்ளடக்கிய தனது வருடாந்த நத்தார் செய்தியில் குடியேற்றவாசிகளின் நெருக்கடி, பயங்கரவாதம் மற்றும் போர் தொடர்பாகக் கவனஞ்செலுத்தியதுடன், உலகளாவிய ரீதியில் சமாதானமும், நல்லிணக்கமும் நிலைநாட்டப்பட வேண்டுமெனவும் அவர் அழைப்பு விடுத்திருந்தார்.

லிபியா மற்றும் சிரியாவில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையினால் முன்வைக்கப்பட்ட தீர்மானம் வெற்றியடைய வேண்டுமென தான் பிரார்த்தித்திருந்ததாகவும் பாப்பரசர் தெரிவித்திருந்தார்.

அதேநேரம், பிரான்ஸ், லெபனான், எகிப்து, டுனீஸியா மற்றும் மாலியில் மேற்கொள்ளப்பட்டிருந்த பயங்கரவாதத் தாக்குதல்களையும் பாப்பரசர் வன்மையாகக் கண்டித்திருந்தார்.

பாப்பரசரின் நத்தார்தினச் செய்தியினை கேட்பதற்காக உலகளாவிய ரீதியில் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்கள் வத்திக்கானை வந்தடைந்திருந்தனர். வத்திக்கானின் பாதுகாப்பு மிகவும் இறுக்கமாக்கப்பட்ட நிலையில், பல்வேறுபட்ட சோதனைகளின் பின்னர் யாத்திரிகர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

பதற்றங்களும், வன்முறைகளும் உலகில் நிறைந்திருந்த நிலையில், இறைவனின் புத்திரன் இப்பூமியில் தோன்றியிருந்தாரென பாப்பரசர் தனது உரையை ஆரம்பித்திருந்ததுடன், லிபியா மற்றும் சிரியாவில் தொடரும் இனப்படுகொலைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு சர்வதேச முயற்சி தேவை என்றும் வலியுறுத்தியிருந்த அவர், பாலஸ்தீனமும் இஸ்ரேலும் நேரடியான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென்றும் இரு நாடுகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.



இவ்வாறான நடவடிக்கைகளால் சகல மக்களினதும் தேசப்பற்று, கலாசாரம் மற்றும் பாரம்பரிய அம்சங்கள் விடுபடக்கூடாது என்றும் ஐ.எஸ். தீவிரவாதிகளை இலக்காகக் கொண்டு பாப்பரசர் கூறியிருந்தார்.

குடியேற்றவாசிகள் நெருக்கடி தொடர்பாகக் கருத்துத் தெரிவித்திருந்த பாப்பரசர், நாடுகளுக்கும் தனிநபர்களுக்கும் இறைவன் சகலதையும் மீண்டும் வழங்க வேண்டும். குடியேற்றவாசிகளையும் அகதிகளையும் வரவேற்பதற்கும் அவர்களுக்கு உதவி வழங்குவதற்கும் முயற்சிக்கும் சகலருக்கும் இறைவன் அருள் வழங்கவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## நத்தார் தாத்தா பயிற்சி வழங்க ஒரு பல்கலைக்கழகம்

சிவப்பு வெல்வெட் ஆடையை மாட்டிக்கொண்டு, ஒட்டுத்தாடி, மீசையுடன் பரிசுப்பொருள்களைத் தூக்கிக்கொண்டு வருவது மட்டும் நத்தார் தாத்தாவின் வேலை இல்லை. சில தாத்தாக்கள் தங்கள் வேலையில் மிகவும் சிரத்தை எடுக்கின்றனர்.

நத்தார் தாத்தாக்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவே ஒரு பல்கலைக்கழகம் இருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் கோடை காலத்தில் 4 நாள்கள் அமெரிக்காவின் கொலோரடோவில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. 70 பேர் கொண்ட ஒரு குழு இதில் பங்கேற்கிறது. ஒளிப்படங்களுக்கு எப்படிக் காட்சி தரவேண்டும்? குழந்தைகள் கேட்கும் அசௌகரிகமான கேள்விகளை எப்படிச் சமாளிக்கவேண்டும்? என்றெல்லாம் இங்கே பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

நத்தார் தாத்தாக்கள்மீது இருக்கும் அன்பால்தான் இந்தப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியிருக்கிறோம். இந்தத் தாத்தாக்கள் குழந்தைகளிடம் வேலை செய்யபோகிறார்கள். அதனால் கவனமாக அவர்களைத் தேர்ந்தெடுக்கும் வேலையைச் செய்கிறோம். எங்கள் பல்கலைக்கழகம் மூலம் வெளிவரும் தாத்தாக்களில் 96 சதவீதம் பேர் அழகான, தொழில்முறைத் தாத்தாக்கள் என்கிறார் பயிற்சிக் குழுவைச் சேர்ந்த ஜீடி நோர்.



## புருணே நாட்டில் கிறிஸ்மஸ் கொண்டாடினால் 5 ஆண்டுகள் வரை சிறை

புருணே நாட்டில் சட்டவிரோதமாக கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களில் ஈடுபட்டால் 5 வருடங்கள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று நாட்டின் தலைவரான சுல்தான் அறிவித்துள்ளார்.

எண்ணெய் வளம் மிக்க சிறிய நாடாக புருணே விளங்குகிறது. கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டால் நாட்டின் இஸ்லாமியர்களான மக்கள் மதம் மாறிவிடக்கூடும் என்கிற அச்சமே காரணமாகவே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் அல்லாதவர்கள் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களில் ஈடுபட முடியும் என்றாலும் தங்களது வீடுகளில் மட்டுமே அவற்றைச் செய்ய முடியும்.

## கிறிஸ்மஸ் கொண்டாட சோமாலியாவில் தடை

சோமாலிய நாட்டில் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. நாட்டின் இஸ்லாமிய நம்பிக்கையை முடக்குவதாக இருப்பதனால் கிறிஸ்தவ பண்டிகைகளுக்குத் தடைவிதிப்பதாக அரசு அறிவித்துள்ளது. கிறிஸ்தவ கொண்டாட்டங்கள் எதுவுமே இஸ்லாத்துடன் தொடர்பற்றவை என்பதால் அவை தேவையற்றவை என சமய விவகார அமைச்சு விடுத்த அறிக்கை தெரிவிக்கின்றது.

## நடமாடும் கிறிஸ்மஸ் மரம்



ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஒருவர் நத்தார் மரமாக தன்னைத்தானே அலங்கரித்துக்கொண்டு கடந்த கிறிஸ்மஸ் காலத்தில் வலம்வந்தார். பிரித்தானியரான ஜோசப்தேசம் தனது உடலை மரமாக அலங்கரித்து, மின் விளக்குகளை அதில் ஒளிரவிட்டுள்ளார். வீதியில் போய்வரும் அனைவருக்கும் வாழ்த்துக்களைப் பகிர்ந்தார். இவர் நடமாடும் நத்தார் மரமாக வர்ணிக்கப்படுகின்றார். (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## கசாப்புக் கடைக்காரராக ஆசைப்பட்ட பாப்பரசர்!

சிறுவனாக இருந்தபோது கசாப்புக்கடைக்காரராக வருவதற்கு தான் விரும்பியிருந்ததாக பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்திருக்கிறார். வத்திக்கானில் உலகின் பல பாகங்களிலுமிருந்து வருகை தந்திருந்த சிறுவர்களடங்கிய பாடகர் குழுவினர் மத்தியிலேயே அண்மையில் பாப்பரசர் இதனைக் கூறியுள்ளார்.


சிறுவனாக இருந்தபோது கசாப்புக் கடைக்காரராக வருவது பற்றி நினைத்திருந்தேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது சிறுபிள்ளைப்பராயத்தில் புவனர்ஸ் அயர்சிலுள்ள சந்தையில் உள்ள இறைச்சிக்கடைகளில் இறைச்சி விற்பனை செய்வோர் வியாபாரத்தில் ஈடுபடுவதை எப்போதுமே மகிழ்ச்சியாக பார்த்ததாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## புனித தாமஸ் அக்குவினாஸ்

*துறவி, மறைவல்லுநர்*

*(கி.பி. 1225 - 1274)*



**மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்**

# புனிதர்களின் பாதையில்

இவரே கத்தோலிக்க பள்ளிகளின் பாதுகாவலர். இவர் எப்படி வாழ்ந்தார் என்பதை இவரது சாவுப்படுக்கையில் இவருக்குத் திவ்விய நற்கருணை கொண்டுவந்த நேரத்தில் இவர் சொன்னவற்றிலிருந்து புரிந்துகொள்ளலாம். "எனது ஆன்மாவை மீட்கவந்த விலைமதிப்பில்லாத செல்வமாகிய இயேசுவே, உம்மை நான் வணங்குகின்றேன். என் படிப்புகள், கண்விழிப்புகள், உழைப்பு அனைத்துமே உம்மீது கொண்ட அன்பினால் தூண்டப்பட்டன."

இவருக்கு ஏறத்தாழ 49 வயது நடக்கும்போது லயன்ஸ் 2ஆவது பொதுச்சங்கத்தில் பங்குபெறச் சென்றார். செல்லும் வழியில் உயிர்நீத்தார். இவரது வாழ்நாளெல்லாம் செபம், படிப்பு ஆகிய சூழலில் அமைந்திருந்தது. இவர் துறவறத்தை நாடியபொழுது, குடும்பத்தார் அனைவரிடமிருந்தும் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. எதிர்ப்பை எல்லாம் தாங்கிக்கொண்டு, புனித தொமினிக் துறவற சபையில் சேர்ந்தார். ஐரோப்பாவின் பல நகரங்களில் உள்ள பேராலயங்களில் மறையுரையாற்றி வந்தார். இவர் எழுதிய ஏராளமான நூல்கள் நம்மை வியப்புக்குள்ளாக்குகின்றன. இன்றைக்கும் குருமாணவர்கள் தத்துவக்கலை, வேதக்கலை பயிலும்போது இவருடைய நூல்களைப் படிக்கவேண்டும் எனில் இவர் எழுதியவை எல்லாக் காலத்திற்கும் எந்த அளவு பொருந்தும் என்று தெரிகிறது.

இவரது காலம்வரை திருச்சபையில் பல மறைவல்லுநர்கள் தோன்றியிருப்பினும், இவரை மட்டுமே 2வது வத்திக்கான் சங்கம், குருத்துவக் கல்விக்கும், கிறிஸ்தவப் பல்கலைக் கழகப்படிப்புக்கும் வழிகாட்டி என்று குறிப்பிடுகிறது. கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் யாவரும் இவரைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், திவ்விய நற்கருணை ஆசீர்வாதத்திற்கு முன் "மாண்புயர்..." என்ற பாடலைப் பாடுகிறோமே, அதிலிருந்து புரிந்துகொள்ளலாம். இந்தப் பாடலைத் தொகுத்தவர் புனித தாமஸ் அக்குவினாஸ்தான்.

"இந்த அருட்சாதனத்தைத் தாழ்ந்து பணிந்து ஆராதிப்போம்" என்பதிலிருந்தும், "அறிய இயலாக் குறையை நீக்க விசுவாசத்தின் உதவி பெறுக" என்ற சொற்றொடரிலிருந்தும் இவர் நற்கருணைநாதரிடம் கொண்டிருந்த ஆழ்ந்த பக்தி, வணக்கம், பற்றுதல், விசுவாசம் அனைத்தும் புலனாகின்றன. திவ்விய நற்கருணைதான் இவரது குருத்துவத்திற்கும், குருமாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும்போதும் மையமாக அமைந்திருந்தது. 1266ஆம் ஆண்டு மீண்டும் பாரிஸ் நகருக்கு அனுப்பப்பட்டார். புனித 9ஆம் லூயி மன்னன் இவரிடம் பெரிய மதிப்பும் வணக்கமும் வைத்திருந்தார்.

இக்காலத்தில் திவ்விய நற்கருணை பற்றி ஓர் சர்ச்சை எழுந்தது. திவ்விய நற்கருணையில் அப்பரசக் குணங்கள் உண்மையிலே உள்ளனவா என்பதுதான். நீண்ட நேரம் சர்ச்சை நடைபெற்றது. இதைத் தோமஸ் அக்குவினாஸ் முன்னால் வைத்தனர். அதன்பின் அமர்ந்து எழுதியவை இன்றுவரை மதிப்புக்கும் பாராட்டுதலுக்கும் உரியவை. "குணங்கள் நீங்குவதில்லை. ஆனால் அப்பம் திருவுடலாக மாறிவிடுகிறது" என்ற அவரது விளக்கம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1272ஆம் ஆண்டு இத்தாலிக்குத் திரும்பினார். ஒருமுறை புனித நிக்கொலாஸ் திருநாளன்று புனிதர் திருப்பலி நிறைவேற்றிக்கொண்டிருந்தவேளையில், காட்சி ஒன்று கண்டார். இக்காட்சி அவரை எந்த அளவுக்கு ஆட்கொண்டது எனில், அதன்பின் அவர் ஒரு வரிகூட எழுதத் தயாராக இல்லை. இவ்வாறு அவர் தொடங்கிய, உலகப் புகழ் பெற்ற, ஞானம் நிறைந்த "வேத இயல் தொகுப்பு" SUMMA THEOLIGA என்ற இறுதி நூல் முற்றுப்பெறவில்லை. ரெஜினால்ட் என்ற இவரது தோழரிடம் புனிதர் கூறியது: "எனக்குத் திருப்பலி வேளையில் காட்சியில் ஆண்டவரால் காண்பிக்கப்பட்டவைகளுக்குப் பிறகு நான் எழுதியவை அனைத்தும் வெறும் குப்பையாகத் தோன்றுகிறது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.162

## ஆகாய் 1 - 2 : சக்கரியா 1:14 : மலாக்கியா 1 - 4

உங்கள் விடைகளை பெப்ரவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | | | | | 16 | | | | 19 |
| | | | 09 | | | 07 | | | |
| 20 | 21 | | | | | | 24 | | |
| | 22 | | | | | 06 | | | 04 |
| 02 | | | | | 1 | | | | |
| | 17 | | | | 18 | | ❖ | | |
| | 15 | | | 14 | | 03 | | | |
| | | | 10 | | | | 08 | | |
| | ❖ | 23 | | | | | | 12 | |
| | | | | 05 | | | | | 13 |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

### இடமிருந்து வலம்

1. நாட்டிலுள்ள அனைத்து மக்களே, ............. கொள்ளுங்கள்.
2. உங்கள் .......... இப்போது இருக்கிறார்களா?
3. ................. மார்பில் இந்த வடுக்கள் எவ்வாறு ஏற்பட்டன?
5. நகர் ................ பாதிப்போர் அடிமைகளாய் நாடுகடத்தப்படுவார்கள்.
7. பென்யமின் வாயிலிருந்து முன்னைய வாயில் இருந்த இடமான மூலை ................ வரையிலும், .......... மக்கள் குடியேற்றத்தால் நிறைந்திருக்கும்.
8. வயல் நிலம் தன் விளைவைத் ......................
9. முன்னைய ................ களில் இருந்ததுபோல் யூதாவின் காணிக்கையும் எருசலேமின் காணிக்கையும் ஆண்டவருக்கு உகந்தனவாய் இருக்கும்.
10. காசா நகரிலிருந்து ......................... அழிந்தொழிவான்.
11. இறந்துபோன தம் தலைப்பிள்ளைகளுக்காகக் கதறி அழுபவர் ............ மனம் கசந்து அழுவார்கள்.
14. ............ என் தலைவர் அவற்றைப் பறிமுதல் செய்வார்.
15. நான் எருசலேம்மீதும் சீயோன் ................ பெரிதும் அக்கறை கொண்டுள்ளேன்.
17. படைகளின் ஆண்டவர் தம் மந்தையாகிய ....................... குடும்பத்தாரைக் கண்காணிக்கிறார்.
20. "இதற்குக் காரணம் ..................?" என்று வினவுகிறீர்கள்.
21. உன் துணைவியும் உடன்படிக்கையால் உன் மனைவியுமான அவளுக்கு நீ நம்பிக்கைத்............... செய்தாயே.
23. படைகளின் ஆண்டவராகிய அரசரைத் .................... கூடாரத் திருவிழாவைக் கொண்டாடவும் ஆண்டுதோறும் அங்கே போவர்.
24. குருக்கள் "ஆம் ....................ப் பட்டது ஆகும்" என்றார்.

### வலமிருந்து இடம்

4. தலைமைக் குருவாகிய யோசுவாவை .............. க் காட்டினார்.
5. "வெளிவரும் ஒரு ......................!" என்றார்.
6. வலிமையான ...................... புறப்பட்டுச் சென்று உலகெங்கும் சுற்றிவருவதற்குத் துடித்தன.
8. திராட்சை செடி .................. கனியைக் கொடுக்கும்.
9. வாய்மையையும் நல்லுறவையும் நாடுங்கள்.
10. நாக்குகளும் வாய்களுக்குள்ளேயே ................. விடும்.
12. இறைவன் நம்மீது இரக்கம் காட்டுமாறு அவர் ..................... முன் இறைஞ்சி நில்லுங்கள்.
13. தாரியு அரசனது இரண்டாம் ஆட்சியாண்டின் ஆறாம் மாதம் இருபத்து நான்காம் ..................
16. "நான் அவனோடு செய்துகொண்ட உடன்படிக்கை ............... அமைதிதரும் உடன்படிக்கை.
18. மலையில் இஸ்ரயேலர் அனைவருக்கென்றும் ........................... நினைவிற்குக் கொண்டுவாருங்கள்.
19. ................ அவர்கள் சோதித்துப்பார்த்தாலும் தப்பித்துக்கொள்ளுகிறார்கள் என்றெல்லாம் நீங்கள் கூறவில்லையா?

### மேலிருந்து கீழ்

2. ஒவ்வோர் அகலுக்கும் ஏழு .................. உள்ளன.
3. எருசலேமைத் தெரிந்தெடுத்த ஆண்டவர் ..................... அதட்டுவாரா!
4. என் பெயருக்கு அஞ்சி நடக்கின்ற உங்கள்மேல் நீதியின் கதிரவன் ................ !
7. படைகளின் ஆண்டவரது வாக்கு எனக்கு அருளப்பட்டது.
11. உன்னை வல்லவனின் வாள் ................... ஆக்குவேன்.
14. பகலுக்குப்பின் ................... வராது.

### கீழிருந்து மேல்

1. நீங்கள் வீட்டுக்குக் கொண்டுவந்தபோது அதையும் நான் ...................... தள்ளிவிட்டேன்.
2. மரக்காலுக்குள் திணித்துப் பளுவான ஈய ................. அதை அடைத்தார்.
3. என்னோடு பேசிய தூதர் "இவை எதைக் குறிக்கின்றன என்று ...................... காட்டுவேன்" என்றார்.
4. எல்லாரும் பலி இறைச்சியைச் சமைப்பதற்காக அவற்றை ................... முன்வருவார்கள்.
10. அவரது ...................... மின்னலைப்போல் பாய்ந்துசெல்லும்.
12. அவர்களை நான் .................... வரச்செய்வேன்.
13. .................. அவர்கள் மன்றாட்டிற்குச் செவிகொடுப்பேன்.
17. ........................ நம்பிக்கைத் துரோகம் செய்தான்.
22. இப்போது .................. உங்களுக்கு எக்கோலத்தில் தோன்றுகிறது.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 160

### சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:



**முதலாம் பரிசு:**
டொ. ஜோர்ச் கெனடி,
சிறுத்தோப்பு,
பேசாலை.



**இரண்டாம் பரிசு:**
அ. அனற் நிவேதா,
அச்சங்குளம்,
நானாட்டான்.

**மூன்றாம் பரிசு:**
அ. நிவேதா குருஸ்,
சவேரியார் வீதி,
தாழ்வுபாடு.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 82 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 70 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 160ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. து. மேரி துஜேந்தினி, சவேரியார் ஆலயம், தேவன்பிட்டி.
02. ம. நிதர்சன், பெற்றா, மன்னார்.
03. F. கில்மன், மணற்குளம், உயிலங்குளம்.
04. பி. தபிசானி, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
05. அ. ஸ்ரெலா மேரி, பழைய குடிமனவீதி, துட்டுவாகை.
06. ச. கிறேசி சோசை, வங்காலை- 01, மன்னார்.
07. S. ஜெபராஜ், சாளம்பன், ஆண்டாங்குளம்.
08. அ. றெமியா, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு, மன்னார்.
09. தே. ஆன் ஜீவனா, சிறுக்கண்டல், முருங்கன்.
10. சவின் மேரி றெஜினா, இரணைமாதா நகர், இரணைதீவு.
11. சி. நிஷா, பெரிய குஞ்சுக்குளம், மடுறோட்.
12. A. கில்டா, கட்டையடம்பன், மடுவீதி.
13. ர. மீரா, பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
14. ச. டிலுக்ஷன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
15. ப. நிலைக்ஷினி, வைகறை, கணேசபுரம்.
16. ப. நிறோமி, இத்திக்கண்டல், அடம்பன்.
17. என். சி. யூலியானி றோச், பள்ளிமுனை, மன்னார்.
18. தி. அந்தோனியா, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
19. யே. ஜெஸ்மின் சோசை, 6ம் வட்டாரம், வங்காலை.
20. த. நிறோஜினி, லக்சனா, செ. கட்டையடம்பன், முருங்கன்.
21. ச. வாணுமதி, பொன்தீவுகண்டல், அளவக்கை.
22. ம. திருஷாளினி, குழந்தையேசு ஆலயம், தாஸ்கோட்டம்.
23. S. மேவின், பறப்பாங்கண்டல், பெரியகுளம்.
24. வி. றுக்சாயினி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
25. அ. இசக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
26. பூவதி தாமோதரம்பிள்ளை, தபால்கந்தோர் வீதி, மன்னார்.
27. M. மேரி மதலேனா, கல்பிட்டிறோட், மாம்புரி.
28. லீ. பாலன், பெற்றா, மன்னார்.
29. கமலா கிறிஸ்தோப்பர், கன்னியர்மட வீதி, பெற்றா, மன்னார்.
30. கு. டெரன் டிலுக்ஷன், ஆலங்குளம், வட்டக்கண்டல்.
31. ம. டோனா ஸ்ரீ ஸ்கந்தராஜா, யாழ்ப்பாணம்.
32. தொ. ஜென்சி, பாப்பாமோட்டை, திருக்கேதீஸ்வரம்.
33. யூஜினா வெல்வன், நாவாந்துறை, யாழ்ப்பாணம்.
34. ச. ஜனனி றெவல், முள்ளிக்குளம், சிலாவத்துறை.
35. றெஜீனா சந்தியாப்பிள்ளை, மோட்டக்கடை, நானாட்டான்.
36. அ. கரோளினி கிறீப்திக்கா, திருகோணமலை.
37. ச. பத்திநாதன் பிரீஸ், மடுக்கோவில், பெரியபண்டிவிரிச்சான்.
38. அ. தீபிகா குரூஸ், சவேரியார் வீதி, தாழ்வுபாடு.
39. வி. மேரி நிறாஜினி, இலந்தைக்குளம், நானாட்டான்.
40. அ. மரொஜினி, டொமினிக்கன் இல்லம், துள்ளுகுடியிருப்பு.
41. A. செபமாலை, சாளம்பன், ஆண்டாங்குளம்.
42. A. றெக்சியா, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு, மன்னார்.
43. கு. அன்ரனி பவித்திரன், காத்தான்குளம், நானாட்டான்.
44. S. டவ்ஷன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
45. S. டயானா, பறப்பாங்கண்டல், பெரியகுளம்.
46. J. ஜோனிக்கா சஞ்சிவனி, குழந்தையேசு வீதி, மாம்புரி.
47. வி. தாசன் டலிமா, தலைமன்னார் கிராமம்.
48. ஆ. ஜெசில்டா, பாசையூர், யாழ்ப்பாணம்.
49. செ. ஞானச்சந்திரா, செட்டிகுளம், வவுனியா.
50. ஸ். லக்சாயினி, சின்னப்பண்டிவிரிச்சான், மடு.

## குண்டு துளைக்காத பாதுகாப்பு......

1ஆம் பக்கத் தொடர்ச்சி

"பாப்பரசர் (ஐ. எஸ் தீவிரவாதிகளிடமிருந்தான) அனைத்து அச்சுறுத்தல்கள் தொடர்பிலும் அறிந்துள்ளார். ஆனால் இவர் மக்களுடன் தொடர்புகொள்ளும் சந்தர்ப்பத்தை இழக்க விரும்பவில்லை" என வத்திக்கானிலுள்ள அருட்தந்தையர்களில் ஒருவரான சிரோ பெனடிட்ரின் தெரிவித்தார்.

ஐ. எஸ். தீவிரவாதிகளால் வெளியிடப்பட்டுள்ள அச்சுறுத்தல் காணொளிக் காட்சியில் தீவிரவாதிகளின் கறுப்புக்கொடி சின்னத்துடன் உரோமிலுள்ள சென். பீற்றஸ் தேவாலயத்தின் புகைப்படங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

"இது உண்மையான அச்சுறுத்தலாகவும் இருக்கலாம். சில சமயங்களில் தாம் எத்தனை பலமானவர்கள் என்பதைக் காண்பிக்க தீவிரவாதிகள் இவ்வாறான அச்சுறுத்தல் காட்சியை வெளியிட்டிருக்கலாம்" எனத் தெரிவித்த அருட்தந்தை சிரோ பெனடிட்ரினி, தீவிரவாதிகளின் தாக்குதல் அச்சுறுத்தலையொட்டி பாப்பரசருக்கான பாதுகாப்பு ஏற்கனவே பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதனால் நத்தார் தின உரை தொடர்பில் அவருக்கு அதைவிடவும் விசேட பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என தான் கருதவில்லை எனவும் கூறினார்.

## நடமாடும் கிறிஸ்மஸ் மரம் ......

13ஆம் பக்கத் தொடர்ச்சி

நகரின் பல பகுதிகளில் கிறிஸ்மஸ் கண்கவர் அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. ஆனாலும் நகரின் சில பாகங்கள் அலங்கரிக்கப்படவில்லை. அவ்வாறான இடங்களுக்கு கிறிஸ்மஸ் மகிழ்ச்சியை பரவச்செய்வதற்காகத்தான் இவ்வாறு உடையணிந்து திரிகிறேன் என தேசம் தெரிவித்தார். "எதிர்பாராதவிதமாக மக்களை மகிழ்விப்பது எனக்கு மிகவும் பிடிக்கும். மக்களும் மிகவும் குதூகலம் அடைகின்றனர்" எனவும் தெரிவித்தார்.

அவரது ஆடையை வடிவமைக்க 60 நாள்கள் எடுத்தனவாம். சாக்குப்போன்ற துணியில் பிளாஸ்டிக் கிறிஸ்மஸ் இலைகளை வைத்து வடிவமைத்துள்ளார். மரத்தை ஒளிரச்செய்ய 99 பற்றிகளும், 30 மீற்றர் நீளமான வயரும் பொருத்தப்பட்டுள்ளன.

"டோக்கியோ நகரம் பிரம்மாண்டமானதுதான். ஆனால் மக்கள் எவருடனும் அவ்வளவாக இடைத்தொடர்புகளைப் பேண மாட்டார்கள். என்னைக் கண்டவுடன் மகிழ்கிறார்கள். புகைப்படம் எடுத்துக்கொள்கிறார்கள். இது ஒரு சிறந்த மாற்றம்" எனத் தெரிவித்தார்.

## மன்னார் மறைமாவட்டத்தில் ......

1ஆம் பக்கத் தொடர்ச்சி

மன்னார் மறைமாவட்ட பல்சமய உரையாடல்கள் மற்றும் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் இந்த இரண்டு அமைப்புக்களின் இணைப்பாளராக இருந்து இந்த நிகழ்வுகணை ஒருங்கிணைக்கின்றார்.

கடந்த டிசம்பர் 30ஆம் திகதி முருங்கனிலும், மன்னாரிலும் இந்த நிகழ்வுகள் தொடர்பாக நேசன் அடிகளாரின் தலைமையில் ஆயத்தக் கூட்டங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## மேரி பஸ்ரியன் அடிகளாரின்.....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

மேரி பஸ்ரியன் அடிகளார் 1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் திகதி இரவு வங்காலைப் பங்குமனையில் வைத்து இலங்கை இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார். இதற்கு கண்கண்ட சாட்சியங்கள் இருந்தபோதும் இலங்கை அரசாங்கம் அவ்வேளையில் இதை முற்றாக மறுத்ததுடன் அடிகளார் இந்தியாவுக்குத் தப்பிஓடிவிட்டார் என அன்றைய பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலி கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளோம் என்பதையும் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

- *மன்னா நிர்வாகம்* -

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யுபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம்** : கறுப்பு வெள்ளை 4,500/=, கலர் 7,500/=

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 23ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 10 1917



உதிர்வு 10 01 1992

மலர்வு 08 12 1917



உதிர்வு 24 09 1992

**திரு. எலியாஸ் யோசப் பீரிஸ்**　　**திருமதி. வெற்றிமேரி பீரிஸ்**

"என் பார்வையில் நீ விலை உயர்ந்தவன். மதிப்பு மிக்கவன்.
நான் உன்மேல் அன்புகூர்கிறேன்" (எசாயா 43:4)

நேர்மையற்ற இந்த உலகில் நேர்மையுடன் வாழ்ந்தீர்கள்.
"நேர்மையும், நிரந்தர நிம்மதியும் உங்களுக்கு நானே" என்று
நிமலன் உங்களை வெகுசீக்கிரம் அழைத்துச் சென்றனரோ!
எத்தனை ஆண்டுகள் சென்றபோதும் உங்களை மறக்க முடியவில்லையே!
ஆசை அம்மா, உங்கள் மடிமீது தலைவைத்து படுத்தபோது கிடைத்த சுகம்
உலகில் எதிலுமே கிடைக்கவில்லையே!
இறைவன் பாதத்தில் இன்பமாய் இருப்பீர்கள் என்று
கவலை மறக்கின்றோம் அன்பர்களே !

*பிரிவால் நினைந்துருகும் : பிள்ளைகள்*

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 04 06 1939



உதிர்வு 10 12 2015


**திரு. சுவக்கீன் செபஸ்ரியான் குலாஸ்**

(இளைப்பாறிய அதிபர் - தலைமன்னார் கிராமம்)

எம்மைவிட்டுப் பிரிந்ததப்பா உமது உயிர்
ஆனால் எங்கள் மனதைவிட்டு
விலகவில்லை உங்கள் நினைவு!
நீர் வித்திட்ட முத்துக்கள்
எம்மால் உம் பிரிவை
ஏற்க முடியவில்லை பப்பா!
பொறுமை என்னும் பண்பே உம் திறமை
பொறுமை அன்பு அமைதி அதுவே
நீங்கள் எமக்களித்த அறிவுடமை.
உங்கள் ஆன்மா ஆண்டவரிடம்
அமைதி அடைய மன்றாடுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்,
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார் உறவினர்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



**திரு. அந்தோனியப்பு அதிரியான் சோசை**

(அப்பையா, அப்பா)

**வங்காலை**

மலர்வு : 31.07.1925
உதிர்வு : 12.12.2015

"படைகளின் ஆண்டவரே உமது உறைவிடம்
எத்துணை அருமையானது" (திரு.பாடல் 84:1)

அப்பா, அன்பான அப்பா!
மாதமொன்று மறைந்தாலும்
வீட்டில் நடந்த பாதச்சுவடுகள் அழியவில்லையே அப்பா!
பாசத்தின் தீபமாய் பண்பின் சிகரமாய்
பாரபோற்ற வாழ்ந்த பொக்கிசம் அப்பா நீங்கள்
பாரம்பரியங்களை கட்டிக்காத்த
கோபுர விளக்கு நீங்கள் அப்பா!

எங்கள் குடும்பத்தை வாழவைத்த வைரமரம் நீங்கள்
வங்கக் கடலின் நல்முத்து, வங்க நகரின் பொதுச்சொத்து
பங்கமற்ற விசுவாசிகளின் அசல் வித்து!

அன்னை ஆனாளின் தங்கமகன்,
நிறைவான வங்க மகன், சிம்மக்குரலிசைச் சிங்கமகன்
பொறுப்புடன் சேர்த்தது கோயில் நிலுவை
மகத்தான சேவைக்கு எதிர்பார்த்ததில்லை சலுகை அப்பா!

ஆலய சேவையில் நேர்மையாய்
வாய்ச் சொல்லில் ஓர்மையாய்
கணக்கான கணக்குப் பிள்ளை அப்பா
மாவட்ட மரியாயின் சேனையின் மகுடமாய்
புனித சூசையப்பர் சபையினையும் அணிசெய்த
அணித்தலைவர் நீங்கள் அப்பா.
பங்குத் தந்தையருக்கு வழிகாட்டியது உங்கள் பொறுப்பு.

உங்கள் சேவை வங்காலைப் பங்கிற்கு தனிச்சிறப்பு
உங்கள் ஆன்மா சாந்தி அடைய வேண்டுகின்றோம்.
*சாந்தி! சாந்தி! சாந்தி!*

பிரிவால் நினைந்துருகும்,
மனைவி, மக்கள், அருட்பணி. லீனஸ்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 06 1993



உதிர்வு 29 01 2015

**செல்வன். ஆனந்தன் அனுக்சன்**

(நொச்சிக்குளம், உயிலங்குளம்)

"ஆண்டவர் அளித்தார். ஆண்டவர் எடுத்துக்கொண்டார்,
ஆண்டவரது பெயர் போற்றப்பெறுக" (யோபு 1:21)

ஓராண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரங்கள்.
மீண்டுமெப்போ காண்போமென
ஏங்கித் தவிக்கின்றன எம் இதயங்கள்!

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நீங்காத உன் நினைவோடு
உனது ஆன்ம சாந்திக்காக
இறைவேண்டலில் நிலைத்திருக்கின்றன
உன் இரத்தத்தின் இரத்தங்கள்!

*பிரிவால் நினைந்துருகும்*
*குடும்பத்தினர்.*

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 03 1952



உதிர்வு 22 01 2014

**திரு. செபமாலை மிக்கேல் தற்குருஸ்**

(கீளியன்குடியிருப்பு, தலைமன்னார்)

அன்போடும் பாசத்தோடும் பழகி
எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டீர்களே அப்பா
ஈராண்டு காலம் ஆகியும்
எங்கள் வேதனை தீரவில்லை அப்பா
எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும்
உம்மை மறவோம் அப்பா
உம் ஆன்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிரிவால் நினைந்துருகும்,
மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளை

### மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் அல்லது உரிய குடும்பத்திடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். - மன்னா நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி



நிதம் எமக்காய் மன்றாடும்....!
ஈரைந்து ஆண்டுகள் கரைந்துதான் போயின..
ஈடு செய்யமுடியா உங்கள் இழப்பு!
இன்னும் நோகிறது எங்கள் இதயங்கள்
பத்தரை மாற்றுப் பசும் பொன்னாய்
இத்தரை வாழ்ந்து சென்றதுங்கள் தடம்.....!
கண்ணுக்குள் அசைந்தாடும் உங்கள் நிழல்
பண்புநிறை குணம் கொண்டவளே.. ரெசின்
கைப்பிடித்த கணவனோடு
வானேகிப் போனாய்..
மாற்றில்லாதே தவிக்கிறோம்.. தங்காய்....
மாறாத நினைவுகளை மீட்டுகின்றோம்....
நித்தியத்துள் நிலைத்தவரே.....!
நிதம் எமக்காய் மன்றாடும்....!

**திரு. திருமதி. ரெசின் ஜீன் நந்தகுமார்**

(7ம் வட்டாரம், பேசாலை)

(12.01.2006 - 12.01.2016)

பிரிவால்
நினைந்துருகும்,
குடும்பத்தினர்

## 31வது நினைவஞ்சலி



**திரு. சூ. அந்தோனிப்பிள்ளை**

(ஓய்வுபெற்ற உபதபால் அதிபர்)
இலந்தைக்குளம், நானாட்டான்.

பறந்து ஏன் போனாயோ?
ஒன்றாகச் சேர்ந்திருந்தோம்
ஓருயிர்போல் வாழ்ந்து வந்தோம்
பாசத்திற்கு உதாரணமாய்
பலர் கூற நாமிருந்தோம்.
துன்பம் என்ன வந்தாலும்
துயர்துடைக்க நீயிருந்தாய்
பண்புருவே நாம் தவிக்க
பறந்து ஏன் போனாயோ?

பிரிவால் நினைந்துருகும்,

குடும்பத்தினர்

மலர்வு :
25.11.1941

உதிர்வு :
28.11.2015

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 01 1930 — உதிர்வு 12 01 2015



**திருமதி. சலேற்றம்மா பூலோகசிங்கம்**

(எள்ளுப்பிட்டி, மாந்தை)

"என்னிடத்தில் ஒப்படைக்கும் எவரையும் நான் அழியவிடாமல் இறுதிநாளில் உயிர்த்தெழச் செய்வேன்" (யோவான்: 6:30)

அன்பின் தாயே, அரவணைப்பின் ஊற்றே,
ஆண்டு ஒன்று ஆனபோதும் ஆறாது அம்மா எம் துயர்
ஆற்ற முடியவில்லை எம் மனதின் காயங்கள்
கசிந்த விழிகள் காய மறுக்கின்றன.
வறுமை பல வடிவில் வாட்டிய போதும்
வளமாக எம்மை வளர்த்த தியாக அம்மாவே
வானக வீட்டில் தந்தையின் வலப்புறமிருக்க
வாஞ்சையுடன் வேண்டுகின்றோம் எம் வாழ்நாள் எல்லாம்.

பிரிவால் நினைந்துருகும்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தகவல்: பேரப்பிள்ளைகள் (அமல், விமல்) மடுக்கரை

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 06 1945 — உதிர்வு 05 01 2015



**திரு. முத்தையா அன்ரனி**

(லிற்றோ கேஸ் விற்பனையாளர் - மன்னார்)

"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (அரு.11:25)

ஏழ்மையாக வாழ்ந்தாலும் - நீர் நேர்மையாகச் செயற்பட்டீர்
"காமடிகள்" கதைத்து கவலையை மறைத்து
காலங்களை ஓடச்செய்தீர்
மும்மொழிதனை இனிமையாய் பேசி
மக்கள் மனம் கவர்ந்து - தொழிலில்
முழுமையாய் ஈடுபட்டு - நீர் முன்னேற்றம் பல கண்டீர்
பல நோய்களை உடலில் சுமந்தும்
பல துயரத்தை உள்ளத்தில் ஏற்றும்கூட
பாசமுள்ள அன்பு மனைவியைப் பிரிய
உம்மால் எப்படி முடிந்ததையா?

பிரிவால் நினைந்துருகும்,
மனைவி, சகோதரி, மச்சான்மார்கள், மச்சாள்மார்கள்,
பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 06 1964 — உதிர்வு 05 01 2015



**திரு. சிங்கராஜா நோபேட் டிக்ஷன்**

(பெற்றா, மன்னார்)

"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு
அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது"
(திருப்பாடல் 116:15)

பூமிக்கு நாமொரு யாத்திரை வந்தோம் - நின்
யாத்திரை முடிந்து ஆழ்துயில் கொண்டீர்
சீரிய பந்தய ஓட்டமும் முடிந்ததே
ஆண்டவர் நிழலினில் வாகை நீர் சூடுவீர்!

ஓராண்டு மறைந்தது
நாம் உம் நினைவுகளை என்றும் மறவோம்!

பிரிவால் நினைந்துருகும்,
மனைவி, பிள்ளைகள், உறவினர்.

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 12 1948 — உதிர்வு 26 01 2014



**திருமதி. செபமாலை வரோணிக்கா லெம்பேட்**

**(மோணிக்கா) - வங்காலை**

எங்கள் இதயங்களில் உறைந்தவளே
எங்கள் உணர்வுகளில் நிறைந்தவளே
நின்துன்பம் மறந்து எம் துன்பம் துடைத்தவளே
அன்று உந்தன் அரவணைப்பால் அகமகிழ்ந்தோம்
இன்று நீங்கள் இல்லாமல் தவியாய்த் தவிக்கின்றோம்
நீங்கள் விட்டுச்சென்ற நற்பண்புகள் எம்மை வழிநடத்துதம்மா
நீங்கள் இல்லாத வீடு வெறிச்சோடிப் போனதம்மா
ஆண்டிரண்டு சென்றாலும் ஆறவில்லையம்மா எம் துன்பம்
ஆண்டவன் சந்நிதியில் உம் ஆன்மா அமைதிபெற
இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும், குடும்பத்தினர் "பொன்னகம்"

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 23 11 1941 — உதிர்வு 30 10 2015



**திரு. அரியநாயகம் யேசுதாசன்**

(ஓய்வுபெற்ற தபாலதிபர்- சின்னக்கடை, மன்னார்)

"தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்
அவர்கள் கடவுளைக் காண்பார்கள்"

பசும்பொன் மாணிக்கம் மணிவைரம்
இவையாவும் ஐயா உங்கள் அன்புக்கு ஈடாகுமா?
ஏழேழு ஜென்மங்கள் எடுத்தாலும் உங்கள் அன்புக்கு
நாம் பட்ட கடன் தீருமா? உங்கள் பாசக்குரல் எம் காதில்
ஒலிக்கின்றது ஏன் இந்தப் புன்னகை? - ஐயா
நீங்கள் எங்கள் மனம்தனில் நீங்காத உறைவிடமாகி
விட்டீர்களே! நீங்கள் சொர்க்கத்தில் இணைத்திருக்க
இறைவனை நாம் இறைஞ்சுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்,
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளை,
சகோதரர்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 23 06 1945 — உதிர்வு 11 12 2015



**திரு. கே. எவ். கிருபைநாயகம்**

(இலந்தைவான், அடம்பன்)

நாட்கள் முப்பத்தொன்று ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை அப்பா உம் பிரிவின் துயரம்
உம் நேச உறவுகளைத் தவிக்க விட்டு
எம்மவர்க்காய் பரிந்துரைக்க விரைந்திட்டீரோ!

காலங்கள் கடந்தாலும்,
நாட்கள் பல நகர்ந்தாலும்
ஒவ்வொரு வினாடியும் எம்மோடு
நீங்கள் உயிர்வாழ்கின்றீர்கள் அப்பா!

பிரிவால் நினைந்துருகும்,
மனைவி, பிள்ளைகள்

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org